# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, ஒக்டோபர் 19, 2018. இதழ் - 35







**வலது மற்றும் இடது மூளைச் சந்தைப்படுத்தல்**

தற்போதை காலகட்டத்தில் சந்தைப்படுத்துனர்களால் பல்வேறுபட்ட சந்தைப் படுத்தல் பக்கம் - 14



**மதுபாவனைக் கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை**

'நல்ல மனிதன் சாரயத்தை தொட்டதுமில்லை, அது தொட்டவனை பக்கம் - 14



**பிள்ளைகள் மனதில் பதியும் சமூகக்காட்சிகளின் தாற்பரியம்**

'பிள்ளைகளின் ஆழ் மனதில் பதியப்பட்டவைகள்தான், பிள்ளைகளின் செயற்பாடுகளில் செல்வாக்கு பெறுகின்றன. பக்கம் - 06



**கிழக்குப் பல்கலைக்கழகம் கவனிக்குமா?**

கிழக்குப் பல்கலைக்கழகம் "முன்பள்ளி டிப்ளோமா (வெளிவாரி) புறநிலைக்கற்கை..... பக்கம் - 02



# அமைச்சரவையில் மோதல்: அரசுக்குள் மீண்டும் பூகம்பம்?

கொழும்புத் துறைமுக இறங்கு துறை ஒன்றை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதா இல்லையா என்ற விவகாரம் இலங்கை பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே இலங்கை அரசியலில் மீண்டும் ஒரு பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சரவைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் இரு நிறுவனங்களுக்கு கொழும்புதுறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் இறங்கு துறையை வழங்குவது என்ற விவகாரம் நீண்ட நாட்களுக்கு முன்னரே ஆய்வுக்கு எடுக்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், அப்போதே இதற்கு ஜனாதிபதி சற்று எதிர்ப்புக் காண்பிக்க, அது பின்னர் கிடப்பில் போடப்பட்டது. ஆனாலும், கடந்த அமைச்சரவை கூட்டத்தில் இந்த கொள்கலன் இறங்குதுறை விவகாரம் மீண்டும் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு வந்தபோது, அது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே கடுமையான வார்த்தைப் பிரதிவாதம் நடந்ததாக கூறப்படுகின்றது.

கொழும்புத்துறைமுகத்தில் ஏற்றி இறக்கும் பணிகளில் சுமார் 80 வீதமானவை இந்தியாவுடனேயே நடந்துவரும் நிலையில், ஏற்கனவே இன்னுமொரு இறங்குதுறை சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், கிழக்குத்துறையை இந்திய நிறுவனங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தியதாக தெரிகிறது.

ஆனால், அதனை கடுமையாக எதிர்த்த ஜனாதிபதி, ஏனைய நாடுகளின் ஒத்துழைப்புடன் அந்த துறையை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையே நேரடியாக கையாள வேண்டும் என்று கூறியதாக தெரிகிறது.

அதன் காரணமாக வாதப்பிரதிவாதங்கள் இருவருக்கும் இடையே வலுத்ததாகவும் கூறப்படுகின்றது. இதற்கிடையே, இதுகுறித்த மேலதிக ஆய்வுகளுக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் இலங்கையில் அது செய்யவிருந்த பல அபிவிருத்தி நடவடிக்கைகள் முட்டுக்கட்டை

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# கல்முனை பிரதேச செயலக பிள்ளையார் கோயில் விவகாரம்

(காரைதீவு நிருபர்)

கல்முனை தமிழ் பிரதேச செயலக வளாகத்திலமைக்கப்பட்ட பிள்ளையார் ஆலயத்தை அகற்றவேண்டுமென கல்முனை மாநகரசபை மேயர் எ.எம். றக்கீப் கல்முனை நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.



சட்டரீதியாக நகர அபிவிருத்தி பிரிவில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடம் அது என்று கூறி, அதனை இடிக்கவேண்டும் என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனை விசாரித்த நீதிவான் இதற்கான விளக்கத்தை எதிர்வரும் 14 நாட்களுக்குள் நீதிமன்றுக்கு கல்முனை தமிழ்

தொடர்ச்சி... (பக்கம் -02 )





முதலாம் வகுப்பிற்கு பிள்ளையை சேர்ப்பதில்

**அநீதி இழைக்கப்பட்டதா?**

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு – 05

இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

**011 2 501 503**

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

## தமிழ் உள்ளூராட்சி சபைகள் புறக்கணிப்புக் குறித்து கவலை! அமைச்சர் மனோகணேசனுடன் தவிசாளர் சந்திப்பு!



அமைச்சர் மனோகணேசனுடனன் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் சந்தித்து அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேச களநிலைவரம்குறித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு 17ஆம் திகதி கொழும்பிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்களின் அபிவிருத்தி உள்ளூராட்சிசபைகளின் செயற்பாடுகள் எதிர்நோக்கும் புறக்கணிப்புகள் தொடர்பாக விரிவாக ஆதாரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டதாக ஜெயசிறில் தெரிவித்தார். சபைக்கான வாகனங்கள் வழங்குவதிலுள்ள பாரபட்சங்கள் தொடர்பில் கூறப்பட்டது. கடலோரப்பாதுகாப்பு அதிகாரிகளின் பாரபட்ச நடவடிக்கைகள் இனவாத செயற்பாடுகள் பற்றியும் இனநல்லிணக்க அமைச்சர் என்ற அடிப்படையில் எடுத்துக்கூறப்பட்ட.
கவும்அவர் குறிப்பிட்டார்.
அனைத்தையும் உள்வாங்கிய அமைச்சர் மனோ கணேசன் சகல முறைப்பாடுகளையும் பெற்று நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டார்.

கூடவே காரைதீவு பிரதேசசபை உறுப்பினர் த.மோகனதாசும் கலந்துகொண்டார்.

(காரைதீவு நிருபர் சகா)

## கிழக்கு தமிழர் கூட்டமைப்புக்கான ஒப்பந்தம்

கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்னும் கட்சியை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று அதில் பங்கேற்கும் கட்சிகள் மத்தியில் வரும் ஞாயிற்றுக்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி, அகில இலங்கை தமிழர் மகாசபை, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி ஆகியவையே வரும் ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் திகதி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளன.

கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் தமிழ் மக்களுக்கு அதிகபட்ச ஆசனங்களை பெற்றுக்கொள்வதற்காக செய்யப்படும் ஏற்பாடுகளின் ஒரு படியாக இந்த கிழக்கு தமிழர் கூட்டமைப்பை பதிவு செய்வதற்கான முயற்சிகள் நடக்கின்றன.

## கிழக்குப் பல்கலைக்கழகம் கவனிக்குமா?



கிழக்குப் பல்கலைக்கழகம் "முன்பள்ளி டிப்ளோமா(வெளிவாரி) புறநிலைக்கற்கை நெறி"யை தாமதப்படுத்துவதாக வாசகர் ஒருவர் குறைபடுகிறார்.

இந்த டிப்ளோமா நெறிக்கான முன்மொழிவு ஒரு வருடத்துக்கும் முன்னதாகவே உரிய இடத்துக்கு கிடைத்துள்ளதாக தகவல் கூறுகின்றது.

இப்படியான கற்கை நெறியை ஒரு பல்கலைக்கழகம் தாமதப்படுத்துவதனால், முன்பள்ளித்துறையில் ஏற்படக்கூடிய பின்னடைவுகள், சிரமங்கள் அனைவருக்கும் புரியக்கூடியதே. இதனாலேயே அரங்கமும் இதில் கரிசனை காட்ட விளைகிறது.

இது ஒரு இழுத்தடிப்பா அல்லது இந்த காலதாமதத்துக்கு உரிய காரணம் உள்ளதா என்பதை நாமும் அறிய விரும்புகிறோம்.

தொடர்ச்சி...

## அமைச்சரவையில் மோதல்: அரசுக்குள் மீண்டும் பூகம்பம்?

போடப்பட்டு தடுக்கப்பட்டதாக அது உணர்வதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில், இந்தியாவுடன் தனது உறவுகளை சுமுகமாக பேண வேண்டிய நிர்ப்பந்தமும் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

ஆனால், அரசாங்கத்தில் இருக்கும் இரு பெரும் தலைவர்களுக்கு இடையில் இந்த விவகாரம் காரணமாக மீண்டும் ஒரு முறுகல் நிலையே ஏற்பட்டுள்ளது என்று அரசுக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான விவகாரம் உட்பட பல விடயங்களில் இரு தரப்புக்கும் இடையில் கடந்த காலங்களில் பல தடவைகள் சுமூக நிலை பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இன்னும் பொதுத்தேர்தல் வருவதற்கு ஒன்றரை வருடங்களே இருக்கும் நிலையில் மீண்டும் இப்படி ஒரு முறுகல் வெடிப்பது அரசாங்கத்துக்கு நல்லதல்ல என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

## தளவாய் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில்



மட்டக்களப்பு வலயத்திலுள்ள கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் ஒன்று மட்/தளவாய் விக்னேவரா வித்தியாலயம். அங்கு 38 வருடங்களின் பின்னர் இருவர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்குமேல் (179, 174) பெற்று இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், 100 புள்ளிக்கு மேல் 16 பேரும், 80 புள்ளிக்கு மேல் 14 பேரும் 70 புள்ளிக்கு குறைவாக (67 புள்ளி) ஒருவரும் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.

சாதனை படைத்த மாணவியர் இருவரும் பயிற்றுவித்த ஆசிரியையும் அதிபரும் கோட்டக் கல்வி அதிகாரியும் படத்தில் காணப்படுகின்றனர்.

அதேவேளை கொட்டிலிலும் சில வகுப்புகள் நடைபெறுவதும் துரதிஷ்டமே.

தனது வலயத்தின் கல்வி வளர்ச்சியில் பாரிய கவனம் செலுத்தும் வலயக்கல்வி பணிப்பாளர் இந்த விடயத்திலும் கவனம் செலுத்துவாரென சமூகம் எதிர்பார்க்கின்றது.

## சபரிமலை போராட்டம் தொடர்கிறது



கேரளாவில் சபரிமலையை நோக்கிச் செல்லும் பெண்களைத் தடுத்துப் போராடிவந்த போராட்டக்காரர்கள், பக்தர்களுடன் கலந்து விட்டதால், யார் போராட்டக்காரர்கள், யார் பக்தர்கள் என கண்டுபிடிப்பதில் காவல்துறைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பெண்கள் அனுமதிக்கப்படாத சபரி மலை சன்னிதானத்துக்கு, பெண்களும் போகலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து அங்கு பெண்கள் செல்வதை போராட்டக்காரர்கள் தடுத்துப் போராடி வருகின்றனர்.

பம்பையைத் தாண்டியே, சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு செல்ல முடியும். உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு முதல் முறையாக கோயில் நடை புதன்கிழமையன்று திறந்தபோது உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி பெண்கள் உள்ளே நுழையக்கூடாது என பலரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

செய்தி சேகரிக்க வந்த பத்திரிகையாளர்களையும் பாஜக ஆதரவு போராட்டக்காரர்கள் தாக்கியதாக செய்திகள் வெளியாகின்றன.

தொடர்ச்சி...

## கல்முனை பிரதேச செயலக பிள்ளையார் கோயில் விவகாரம்

பிரதேசசெயலாளர் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் 30 ஆம் திகதி அடுத்த தவணை எனவும் உத்திரவிட்டார்.

இந்நிலையில் அன்று மாலை கல்முனை மாநகரசபை அமர்வு இடம்பெற்றது. ஆரம்பத்திலேயே த.தே.கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆலய விவகாரம் தொடர்பாக கேள்வியெழுப்பினார்.

'கல்முனையில் இரு இனங்களும் ஒன்றாக வாழ்ந்துவரும் வேளையில் இனங்களிடையே இனமுறுகலை ஏற்படுத்தவா இவ்வாறு வழக்குதாக்கல் செய்துள்ளீர்கள்?' என வினவினார்.
'இது சட்டத்துக்கு முரணானது என்றால் இன்னும் எத்தனையோ கடைகள் கல்முனைநகரில் உள்ளன. அவற்றையும் இடித்து அப்புறப்படுத்துவீர்களா?' எனவும் அவர் கேட்டார்.


இப்பிரச்சினை நீதிமன்றில் இருப்பதால் அது குறித்துப் பேசமுடியாது என மேயர் சொல்ல, ஏனைய த.தே. கூ.உறுப்பினர்களும் போர்க்கொடி தூக்கினர். வாதப்பிரதிவாதம் தொடர்ந்தது. சபையை நடாத்தமுடியாமல் இடைநடுவில் சபையைக்கலைத்துவிட்டு மேயர் வெளியேறினார். இதற்கிடையே, மறுநாள் தமிழ் பிரதேசசெயலகத்தில் பிரதேசசெயலாளர் எஸ்.ஜெகருபன் மாநகரசபை தமிழ் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். அச்சமயம் ஒரு குழுவினர் வந்து ஆலய மறைப்பை பிய்த்தெறிந்து விட்டுச் சென்றுள்ளார்கள். அதேசமயம் அங்கு வாணிவிழாவுக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.
பின்னர் வாணிவிழா இந்த புது ஆலயத்திலும் நடைபெற்றது.
மொத்தத்தில் இதற்கான அடிப்படை பிரச்சினை கல்முனை தமிழ் பிரதேச செயலக விவகாரமே என அப்பகுதி மக்கள் சிலர் கூறுகின்றனர்.

த.தே.கூட்டமைப்பு இதுவரைகாலமும் இந்தப்பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடித்துவருவதன் விளைவுதான் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகள் எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

## மட். ஐயன்கேணி தமிழ் வித்தியாலயம் தரம் உயர்ந்தது

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள மட்/ ஐயன்கேணி தமிழ் வித்தியாலயம் வகை II என்ற வகுதிக்குள் இருந்து, வகை 1C என்ற வகுதிக்குள் 01.01.2018 தொடக்கம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தொடர்வதில் இருந்த இடர்கள் களையப்பட்டுள்ளதாகவும் இந்த விடயத்தில் ஆக்கமும் ஊக்கமும் தந்த மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.க.பாஸ்கரன் அவர்கள் உள்ளிட்ட கல்விப் புலத்திலுள்ளோர்களை எமது பாடசாலைச் சமூகம் நன்றியுடன் பாராட்டுவதாக அதிபர் எம். மனோகரன் அவர்கள் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 23




2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமது வேட்புமனு அம்பாறை மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்டதனால், அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணியின் மனப்போக்கு எப்படியிருந்தது என்றால் தமது கட்சி போட்டியிட முடியாத நிலையில், வேறு எந்தத்தமிழனையும் வெல்லவிடக்கூடாது எனும்படி எதிர்மறையாக இருந்தது. தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவாளர்களை யூஎன்பியில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும்படி மாவை சேனாதிராசா மறைமுக ஆலோசனை வழங்கியிருந்தார். அம்பாறைமாவட்டத் தமிழர் மகாசங்க சுயேச்சைக்குழுவை தோற்கச் செய்ய வேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. யூஎன்பி பட்டியலில் பாண்டிருப்பைச் சேர்ந்த துரையப்பா முத்துக்கிருஸ்ணன் என்பவரும் இடம்பெற்றிருந்தார். அவரை ஆதரிக்கும்படி கூட்டணி தமிழர்களை கேட்டிருந்தால்கூட அதில் ஒரு தர்க்கமும், நியாயமும் உண்டு. ஆனால், தமிழர் விடுதலைக்கூட்டணி முக்கியஸ்தரான அமரர் ரவிராஜ் அவர்கள், யூஎன்பி பட்டியலில் போட்டியிட்ட நிந்தவூரைச் சேர்ந்த சட்டத்தரணி அப்பாஸ் என்பவருக்கு ஆதரவளிக்கும்படி கோரி, தன்னுடைய பெயரிலேயே வீரகேசரி பத்திரிகையில் தேர்தல் விளம்பரம் கொடுத்திருந்தார்.

தமிழரசுக் கட்சியை தலைமைக் கட்சியாகக் கொண்ட அன்றைய தமிழர் விடுதலைகூட்டணியின் இவ்வாறான செயற்பாட்டால், தமிழர்களின் கணிசமான வாக்குகள், யூஎன்பி பட்டியலில் போட்டியிட்ட பொத்துவில்லைச் சேர்ந்த காசிம் மௌலவி, அக்கரைப்பற்றைச் சேர்ந்த சட்டத்தரணி சேகு இஸ்ஸதீன், நிந்தவூரைச் சேர்ந்த சட்டத்தரணி அப்பாஸ், சாய்ந்தமருதைச் சேர்ந்த மயோன் முஸ்தபா ஆகிய முஸ்லிம் வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்டன.

சுமார் 65,000 தமிழர்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் ஆக 19,000 வாக்குகளே அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கச் சுயேச்சைக்குழுவுக்கு அளிக்கப்பட்டன. தமிழரசுக் கட்சிப் போதையில் ஊறிய தமிழர்கள் எவ்வளவு தூரம் அரசியல் விழிப்புணர்வு அற்றவர்களாக - அரசியல் முட்டாள்களாக தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போட்டுக்கொள்ளும் பாவப்பட்ட மக்களாக கடந்த காலத்தில் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இது சிந்திக்கத்தூண்டும் ஓர் உதாரணமாகும்.

இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திரை மறைவுச் சூழ்ச்சிகள் அத்தனையையும் மீறி அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக்குழு வெற்றியீட்டியது. சுயேச்சைக்குழுவுக்கு கிடைத்த ஆசனம் வாக்கெண்ணும் இரண்டாம் சுற்றிலேயே கிடைத்தது. முதல் சுற்றில் கிடைக்கவில்லை. ஆனால், அரும்பொட்டில் அம்பாறை மாவட்டத்தமிழர்களுக்கு சாத்தியமான ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட்டது. காரணம் விகிதாசார தேர்தல் முறையின் கீழ் சனத்தொகை விகிதாசாரப்படி, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உரிய உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்ட போது அம்பாறை மாவட்டத்திக்கு(திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்) 1994ஆம் ஆண்டு தேர்தலின் போது 06 ஆக இருந்த ஆசனங்களின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டில் 07 ஆக ஆகியிருந்தது. வாக்கெண்ணும் முதலாம் சுற்றில் ஆறு ஆசனங்களும் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்க சுயேச்சைக்குழு தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கே பகிர்ந்து கிடைத்தன. இரண்டாம் சுற்றில் ஏழாவது ஆசனம் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்க சுயேச்சைக்குழுவுக்கு கிடைத்தது. இல்லாவிட்டால், 1994ஆம் ஆண்டைப்போல், 2000 ஆம் ஆண்டிலும் அம்பாறை மாவட்ட தமிழர்கள் தமக்கு கிடைக்கக்கூடிய ஒரேயொரு பாராளுமன்ற ஆசனத்தையும் பறிகொடுத்து, மீண்டும் அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்டிருப்பர். தெய்வாதீனமாகத் தப்பினார்கள். இந்தத்தேர்தலில் விருப்பு வாக்கின் அடிப்படையில், அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்க சுயேச்சைக்குழுவில் ஈ.பி.டி.பி சார்பில் போட்டியிட்ட மார்க்கண்டு குணசேகரம்(சங்கர்) பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

இத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் (கதிரைச் சின்னத்தில்) பட்டியலில் இடம்பெற்றிருந்தனர். தேர்தல் காலத்தில் அஸ்ரப் அவர்கள் அகால மரணமான துன்பியல் நிகழ்வும் இடம்பெற்றது. அஸ்ரப் அவர்களின் அகால மரணத்தைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு வேட்பாளர் பட்டியலில் அவரது துணைவியார் திருமதி. பேரியல் அஸ்ரப் அவர்களின் பெயர் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இலங்கையின் ஜனாதிபதியாக திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா விஜயகுமாரணதுங்க விளங்கிய போதிலும், இத்தேர்தலில் யூஎன்பி நாடளாவிய ரீதியில் வெற்றியீட்டி ஆட்சியமைத்தது. ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் ஏற்பட்ட பனிப்போர் காரணமாக ஒரு வருடம் கழிந்தபின் 2001 இல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பாராளுமன்றம் கலைக்கப்பெற்றது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் நாள் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலின்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஏற்பாட்டிற்கமைய தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ரெலோ இணைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தின் கீழ், ஓரணியில் வடக்குக் கிழக்கில் போட்டியிட்டது. இந்த ஆரம்பகால தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக வீ. ஆனந்தசங்கரி அவர்களே விளங்கினார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி என்பது 1944 இல் இருந்து செயற்பட்ட ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸும், அதிலிருந்து பிரிந்து சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# தாய்வழிச் சொந்தங்கள் பேசட்டும்!

**இரண்டும் தாய்வழிச் சொந்தங்கள்.**

**எவர் மறுத்தாலும் அதுவே உண்மை.**


**ஆனால், களநிலவரத்தில் இரு தரப்பும் நிற்பது ஒன்றுக்கு ஒன்று எதிராக. ஆனால், எவ்வளவு காலம் எதிரியாய் நிற்க முடியும்?**

**அடித்தாலும், பிடித்தாலும் இங்குதான் இருவரும் வாழ்ந்தாக வேண்டும். அதனைத்தவிர வேறு வழி கிடையாது. அதற்கு ஒரே வழி இருதரப்பும் பேசுவதே. இதனைவிட வேறு வழி தெரிந்தால் யாரும் சொல்லலாம். அதற்கும் செவிகொடுக்கத் தயார்.**

**பேசுவதென்பது அரசியல் கட்சிகளோ, அரசியல் தலைமைகளோ பேசுவது என்று மாத்திரம் பொருளல்ல. நாம் ஒருவருக்கு ஒருவர் அனைத்து மட்டத்திலும் பேசியாக வேண்டும். எமது பிரச்சினைகளை வேறு யாரும் வந்து பேசித்தீர்த்து வைக்கவும் முடியாது. அது நிர்ப்பந்தத்தில் முடியும்.**

**இரு தரப்பும் முழுமையான சந்தேகத்தில் இருக்கின்றன. உண்மையில் இந்த பேச்சுக்கள் என்றோ ஆரம்பித்திருக்க வேண்டியவை. இனியாவது அவற்றை உடனடியாக ஆரம்பித்தாக வேண்டும். இப்போதைக்கு பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதுதான் கேள்வி. நாம் கட்டத் தயார். எதிலிருந்து பேசுவது, எதனை முதலில் பேசுவது, எதனைப் பேசக்கூடாது, எப்படிப் பேசக்கூடாது என்றெல்லாம் ஆராய வேண்டிய பல விடயங்கள் இருப்பது உண்மைதான். ஆனால் எப்படியாவது பேசியாக வேண்டும் என்று நினைக்கிறோம். இனியும் தாமதிக்க முடியாது. விரைவில் பேச்சை ஆரம்பிப்போம். இருவரும் வாழ்வதற்காக பேசுவோம். சூழ்ச்சிகளை அகற்றுவோம். சந்தேகங்களை போக்குவோம். விட்டுக்கொடுப்போம். எமது பேச்சு நாளையே முடிந்துவிடாது. இன்னுமொரு இடத்தில் இருந்தும் அது தொடரலாம். ஆனால், பேசி மட்டுமே தீர்ப்போம். சமரசம் மட்டுமே முடிவாகட்டும். இது கிழக்கில் வாழும் தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமான செய்தி. கேட்பது கசப்பாக இருந்தாலும் இதுதான் எமக்கு மருந்து.**

**அன்புடன்**
**சீவகன் பூபாலரட்ணம்**



# பாரதிராஜாவின் வருகை சுட்டுவது என்ன?

பாரதிராஜா பொதுவெளியில் கூறும் கருத்துகள் அநேகமாகச் சர்ச்சைக்குரியனவாகுவதுண்டு.

இலங்கைப் பயணங்களின்போதும் இப்படி வாயைக் கொடுத்து வாங்கியிருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் வன்னிக்கு வந்திருந்த பாரதிராஜாவிடம் போராளிகள் உள்பட வேறு சிலரும் சில கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

அதைக் குறித்து நான் ஏற்கனவே "எதிரொலி" பத்திரிகையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன்.

அதிலிருந்து ஒரு பகுதி - "பாரதிராஜாவின் வருகையும் எந்தப் பெறுமதிகளையும் வன்னிக்குக் கொடுக்கவில்லை. வன்னிக்கு மட்டுமல்ல, ஈழத்தமிழருக்கே கொடுக்கவில்லை என்றே சொல்ல வேணும். பாரதிராஜா கிளிநொச்சியில் திரைத்துறையில் ஈடுபட்டவர்களையும் கலைஞர்களையும் சந்தித்தார். கிளிநொச்சி திருநகரில்தான் சந்திப்பு நடந்தது.



அப்பொழுது, "மணிரத்தினத்தின் "கன்னத்தில் முத்தமிட்டால்" படத்தையும் கமல்ஹாசனின் "தெனாலி"யையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவை இரண்டும் ஈழத்தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்றன. ஈழ அரசியலும் ஈழ நிலவரமும் தெரியாமல் எடுக்கப்பட்ட படங்கள். இதைப்பற்றி உங்களுடைய நிலைப்பாடென்ன?" என்று ஒரு கேள்வியை எழுப்பினார் போராளிக்கலைஞர் ஒருவர்.

மடியிலேயே ஷெல் விழுந்து வெடித்தமாதிரி இருந்தது பாரதிராஜாவுக்கு. ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், சத்தமில்லாமல் அசட்டுத்தனமாகச் சிரித்துக் கொண்டிருந்தார் இரண்டு நிமிசத்துக்கும் மேல். பிறகு சொன்னார், "கமலும் மணியும் என்னுடைய நண்பர்கள். அவர்கள் நல்லவர்கள்" என்று.
"நல்லவர்கள் இப்படிச் செய்யலாமா?" என்று எழுந்தது மறு கேள்வி.

கையில் கட்டியிருந்த மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தார் இயக்குநர் சிகரம். நிலைமையைப் புரிந்து கொண்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் "இத்துடன் நிகழ்ச்சியை முடிக்கப்போகிறோம். இயக்குநர் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது" என்று மணிரத்தினத்தையும் கமலையும் பாதுகாத்த பாரதிராஜாவைப் பக்குவமாகக்

கருணாகரன்

காப்பாற்றிச் சென்றனர்.

ஆனால், எல்லோரும் தமிழ்நாட்டுக்குப் போன பிறகு வன்னிக்குப் போனோம். (ஏதோ தங்களின் செலவில், சுய முயற்சியில் போனதைப்போல) அங்கே புலிகளைச் சந்தித்தோம், பிரபாகரனைக் கண்டோம், பேசினோம் என்றெல்லாம் பேட்டி கொடுத்தனர். சிலர் வாரப்பத்திரிகைகளில் விறுவிறுப்பான தொடரே எழுதிக் காசு சம்பாதித்தனர். கூடவே பிரபாகரனோடும் புலிகளோடும் நின்ற படங்களையும் பிரசுரித்துப் புகழுயர்த்தினர்.

இவர்களெல்லாம் புலிகளையும் பிரபாகரனையும் சந்தித்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்தப் பத்தாண்டு காலத்தில் ஒரு படத்தையாவது ஈழப்பிரச்சினையை வைத்து உருப்படியாக எடுத்தார்களா? அல்லது ஈழச்சினிமா முயற்சிகளுக்கும் பிற கலைத்துறை மேம்பாட்டுக்கும் எப்போதாவது உதவியிருக்கிறார்களா?"

- இப்பொழுது மீண்டும் இலங்கைக்கு வந்த பாரதிராஜா வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பல இடங்களுக்கும் சிலரால் அழைத்துச் செல்லப்படுகிறார். பாரதிராஜாவை அழைத்துச் செல்வோருக்கு சில தேவைகளிருக்கலாம். ஆனால், அவர்கள் பாரதிராஜாவை சமூகப் பெறுமதியாக மாற்ற முற்படுவதே கேள்விக்குரியது.

யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பாரதிராஜா நடந்து கொண்ட முறையும் ஏற்புடையதல்ல.

இவ்வாறானவர்களை பாடசாலைகளுக்கு அழைத்துச் சென்று மேடையில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மூதாதையரின் காலடிகள்

## திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான கும்ப விழா - ஒரு பண்பாட்டியல் பார்வை - 2

சடங்குகளினடிப்படையிலேயே கலைகளின் உருவாக்கம் என்பது உலக வரலாற்றில் நாம் கிரேக்கத்தில் டயோனிசஸ் தெய்வத்துக்குச் செய்கிற சடங்குகளே நாடகமாக உருமாறுவதையும் ரோமா மரபில் வீனஸ் தெய்வத்துக்குரிய சடங்குகளும் எகிப்தின் பழைமிகு நாடக உருவாக்கமும் கலைகளின் உருவாக்கத்தால் சடங்குகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. இங்கு கும்பமும் இன்றுவரை சடங்காகவும் கலையாகவும் தொடரும். இரு பண்பாட்டு கையளிப்பாக அமைந்துள்ளது.

கும்ப விழாவில் வருகின்ற கும்ப ஆட்டம் ஒவ்வொருவருக்குள்ளிருக்கும் அல்லது புதைந்து கிடக்கும் கலைத்திறனின் வெளிப்பாடாகவே நாம் காணமுடியும்.

கும்பம் எடுத்தல் கும்பம் தூக்குதல் என்ற நிகழ்வில் பூசாரியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தெய்வத்தை உருவகப்படுத்தி அவர்கள் மீது மந்திரங்களை ஏற்றுகிறார்களோ அதன்மூலமாக அந்தத் தெய்வங்கள் பற்றிய ஐதீகங்களையும் புராணங்கள் கதைகள் கூறுகின்ற குணாம்சங்களையும் உள்வாங்குகிறார்கள். பின்னர் ஆடுகிறபொழுது அந்த தெய்வமாகவே தங்களை உருவகித்துக் கொண்டு ஆடுகிறார்கள். பரம்பரையாக தங்கள் குலமரவு தெய்வங்களையும் வெளிப்படுத்துவர். உதாரணமாக மாரியம்மன் என்றால் மிகவும் நளினமான ஆட்டம் வெளிப்படும். காளியென்றால் மிகவும் ஆக்ரோசமான ஆட்டத்தைக் காணலாம். அந்ததந்த கடவுளர்களை உருவகித்துக் கொள்ளல் இங்கு முக்கியப்படுகிறது. ஒரு நாடக நெறியாளன் எப்படி ஒரு பாத்திரத்துக்கான குணாம்சங்களை நடிகர்களுக்குச்



சொல்லிக் கொடுப்பானோ, அதேபோலவே மந்திரம் மூலம் ஒரு பூசாரி அந்த தெய்வத்துக்குரிய மந்திரங்களை உச்சத்துல் அழைக்கிறபொழுது அந்த தெய்வமே எழுந்து வருகிறது போல அமையும். அந்தக்காட்சி வீரபத்திரன் என்றால் தக்க யாகத்தை அழிக்க அகோர வீரபத்திரன் புறப்பட்ட காட்சியை மந்திரம் மூலம் வெளிப்படுத்த வீரபத்திரனாக தன்னை உருவகித்து கொண்ட ஆட்டம் வெளிப்படும். இங்கு பங்குகொள்கிற ஒவ்வொருவரும் தாங்கள் ஒரு கலை வெளிப்பாட்டைச் செய்கிறோம் என்று அறியாமலேயே கலைஞர்களாக பரிணமிக்கின்றனர்.

இந்திய நாட்டிய சாஸ்திரத்தில் பரத முனிவர் முதல் நாடகமாக பாற்கடல் கடைந்த கதை என்பது ஒரு சடங்குத் தன்மையுடன்தான் நடைபெறுகிறது. நாட்டிய சாஸ்திரத்தின் தொடக்கமே சடங்குதான். அந்த சடங்கிலிருந்துதான் நடனமுறைமைகளை பின்னாளில் வேறுபடுத்தி அதற்கான இலக்கணங்களை உருவாக்கினார்.

நாட்டிய சாஸ்திர ஆசிரியர் சொல்கிற ரசானுபவம் நமக்கு கும்ப சடங்கில் கிடைக்கிறது. ஒன்பது வகையான ரசங்களும் அதற்கு மேலதிகமாக ஊற்றுப்பெறும் ராசானுபவங்களும் கும்ப ஆட்டத்தில் காணலாம். இங்கு போலச் செய்தலின் மிக உச்சமான வெளிப்பாட்டுத் திறன். ஸ்ரனிஸ்லாஸ்கி சொல்வாரே பாத்திரங்களை வெளிப்படுத்தல் என்பது இங்கு கும்பவிழாவில் ஒரு ரசவாதமாக மாறி நம்மை பிரமிக்க வைக்கிறது. எத்தனை முகங்கள், எத்தனை பாவங்கள் மாறிமாறி வருகின்ற உணர்ச்சிப் பிரவாகம் எல்லாம் இங்கு கொட்டித் தீர்க்கப்படுகின்றன.

குரொட்டவஸ்கியின் குரூர அரங்கிற்கான மூலத்தையும், மேயர்கோல்டின் உடற்பொறிமுறை அரங்கிற்கான ஆதாரங்களும், பெரக்டின் அன்னியமாதல் கோட்பாட்டையும், ஸ்ரனிஸ்லாஸ்கியின் பாத்திரமாதல் மரபையும், றிச்சட் செக்கனரின் அனைத்தும் உட்கொண்ட அரங்கின் கூறுகளையும் நாம் இந்த கும்பவிழாவில் ஆடப்படும் ஆடட்டத்தில்; அவதானிக்க முடியும்.

அரங்கியல் வரலாற்றில் உருவான கோட்பாடுகள் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. இரண்டு பிரதானமான விவாதங்கள் உள்ளன.

(1) சடங்கிலிருந்து நாடகங்கள் உருவானது
2) சடங்கே நாடகம்.

இந்த இரண்டு கோட்பாடுகளும் ஒன்றையொன்று இணைத்த முறைமைதான் இங்கு சடங்கே நடனமாக மாறுவதை நாம் காணலாம். ஒரு பரதநாட்டிய அரங்கேற்றத்தில் நீங்கள் எத்தனை விதமான பாவங்களையும் ரசானுபவத்தையும் பெறுவீர்களோ அதற்கு அதிகமாகவே நீங்கள் கும்ப ஆட்டத்தில் காணமுடியும். சில இடங்களில் நரசிங்கக்களைக் ஆடுபவர்கள் நாக்கை நீட்டிக்கொண்டு கோர முகத்தை வெளிப்படுத்துகிறபோது எந்தவொரு நடிகனாலும் அத்தகைய பாவத்தைக் கொண்டுவர முடியாத அளவுக்கு கும்ப ஆட்ட முறைமை அமைந்திருக்கும்.

கும்ப விழாவை என் சிறுவயது தொடக்கம் பக்கத்திலிருந்து பார்த்து ரசித்தவன் என்ற வகையிலும் பின்னாட்களில் இவற்றை அறிவியல் ரீதியாக எப்படிப் பார்க்கலாம் என்ற வகையிலும் எனக்கு மேலைத்தேய, கீழைத்தேய கலை மரபு கோட்பாடுகள் துணை நிற்கின்றன. ஒன்றை நாம் எப்படிப் பார்க்கின்றோம் என்ற வகையில்தான் அதன் தன்மை நமக்குள் வெளிப்படும். அதன் உள்ளிருந்து பார்ப்பவர்களுக்கு ஒரு சடங்காக பக்தி அனுபவமாக இருக்க, வெளியிலிருந்து ரசிப்பவர்களுக்கு அது ஒரு கலையாக உணரப்படுகிறது.

கும்பவிழா ஒரு தெரப்பியாகவும் தொழிற்படுகிறது. வருசம் முழுவதும் தங்களுக்குள் அடக்கி வைத்திருக்கும் கோபம், சந்தோசம், துக்கம், வெப்பிசாரம் என எல்லா உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஒரு களமாகவும் இவை அமைகிறது. இங்கு ஆடுபவர்கள் அந்த நிலையை பெறுகிறபோது பார்ப்பவர்கள் அதனுள் சென்று அந்த அனுபவத்தைச் சுவைக்கிறார்கள். மன அழுத்தங்களுக்கு மருந்தாக இவை மாறுவதை நாம் இங்கு அவதானிக்க முடியும்.

திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாக நாம் இங்கு கும்ப விழாவைப் பார்க்க முடியும். ஒரு நடன ஆசிரியர் திருகோணமலையில்

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

இந்த கும்ப நடனத்தை மேடையில் தன் பிள்ளைகளைக் கொண்டு நிகழ்த்தியிருந்தார். அவர் யாரென்று எனக்கு ஞாபகமில்லை. ஆனாலும் அவை ஒரு முக்கியமான மடைமாற்றம் தனியே ஒரு சடங்கு முறைக்குள் அடங்கிப் போகாமல், இதனை நாம் ஒரு கலையாகவும் அடையாளப்படுத்த வேண்டும்.

(ஒளிப் படங்கள் உதவி திருகோணமலை ஊடகவியலாளர் சிங்காரவேல் சசிகுமார்)

# எல்லாளன் மற்றும் துட்டகாமினி காலத்தில் கிழக்கிலங்கையில் வாழ்ந்த தமிழரசர்கள்



அண்மைக்காலத்தில் கிடைக்கப் பெற்ற வரலாற்றுத் தகவல்கள் மூலம், மட்டக்களப்புத் தேசத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலம், குறுணிக்கற்காலம், பெருங்கற்காலம் என்ற வரலாற்றுக் கால கட்டங்கள் நிலவியமை பற்றியும், நாடோடி வேட்டைக் காலம், நாடோடி மந்தைக் காலம், நிலையான பயிர்ச்செய்கைக் காலம் என்ற சமூக வளர்ச்சிக்கட்டங்கள் நிலவியமை பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த சமூக வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் சிற்றரசுகள் தோற்றம் பெற்றதனையும் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்விடயம் குறித்த ஒரு சுருக்கமான அறிமுகத்தை 'மட்டக்களப்புத் தமிழ்ச் சமூகம் : அறியப்பட்டனவும் அறியப்படாதனவும்' என்ற கட்டுரையில் முன்வைத்திருந்தேன்.

அக்கட்டுரையில், “மட்டக்களப்புத் தேசத்தில் வாழ்ந்த மக்களின் தொடர்ச்சியான வரலாற்று வளர்ச்சியை இப்போது, இவ்வாறு புரிந்து கொள்ள முடிகிற போது, அறியப்படாத விடயங்கள் அதிகரித்தச் செல்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.” என்ற விடயத்தினையும் சுட்டிக்காட்டியிருந்தேன். அந்த அறியப்படாத விடயங்களில் முதலாவது விடயம், இலங்கை வரலாற்று நூல்களில் குறிப்பிட்டுள்ள எல்லாளன் மற்றும் துட்டகாமினி காலத்தில் கிழக்கிலங்கையில் வாழ்ந்த தமிழ் சிற்றரசர்களை, இந்த வரலாற்று வளர்ச்சிக் கட்டத்தில் எங்கனம் பொருத்திப் பார்ப்பது என்பதாகும்.

முதலில் இலங்கை வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ள தகவல்களை நோக்கலாம். இலங்கை வரலாற்று நூல்களில் பிரபல்யமான மகாவம்சம், துஸ்டகாமினியின் வெற்றி எனும் 25 ம் அத்தியாயத்தில் “மஹியங்கானவுக்கு வந்து சேர்ந்த அவன் (துட்ட காமினி) சத்தன் என்ற தமிழனை வெற்றி கொண்டான். அதேஇடத்தில் அவனைக் கொன்று விட்டு அம்ப திட்டகத்துக்கு வந்தான்.” எனக் குறிப்பிடுகிறது. அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த எலராவுடன் /எல்லாளனுடன் போர் புரிவதற்காகச் சென்ற துட்டகாமினி, வெற்றி கொண்ட தமிழரசன் பற்றிய செய்தியை இச்செய்யுள் கூறுகிறது.

தொடர்ந்து வரும் பகுதியில் அவன் ஏனைய தமிழ் அரசர்கள் பலரைக் கொன்ற விபரம் தரப்படுகிறது. திட்டகத்திலுள்ள நதியின் சுரங்கவாயிலில் தித்தம்பன்என்ற தமிழனை எதிர்த்து நான்கு மாதகாலம் கடுமையாகப் போரிட்டான். பலமுள்ள எதிரியை சூழ்சியால்தான் வெற்றி கொள்ள முடிந்தது. தாயாரைக் காட்டி அவைன வெற்றி கொண்டான் எனக்குறிப்பிடுகிறது மகாவம்சம்.

பிறகு நதியைக் கடந்துவந்த அரசன் ஒரே நாளில் ஏழு தமிழர்களை வெற்றி கொண்டு அமைதியை நிலைநாட்டினான் எனவும் அந்த இடத்திற்கு கோமராமாஎன்ற பெயர் வந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. பின், அந்தரசோபாவில் மகா கொத்தனை வெற்றி கொண்டான், டோண காவரத்திலும் ஹாலகோல இஸாரியத்திலும், நாழிசோப நாழிகாவிலும் அவனுக்கு வெற்றி கிடைத்தது, தீகாபய கல்லகத்தில் தீகாபயனை வெற்றி கொண்டான். நான்கு மாதங்களுக்குள் கச்ச திட்டத்தில் கபிசீகனை வென்றான், கோதானகரத்தில் கோதனைப் பேரிட்டு வென்றான், வஹியத்தில் தமிழன் வஹித்தனை முறியடித்தான், கும்பகாம கும்பா, நந்திகாம நந்திகா, கானுகாமத்தில் கானு, மாமனும் மருமகனுமான தம்பா, உனமா ஆகியவர்களையும் அவன் தோற்கடித்தான், ஜம்புவும் அவன் வசப்பட்டது. அவன் கைப்பற்றிய ஒவ்வொரு கிராமமும் படைத்தலைவர்களின் பெயரால் அழைக்கப்பட்டது. அத்துடன் நதிக்கரையில் உயிர்தப்பிய அத்தனை தமிழர்களும் விஜிதநகரம் என்ற நகரத்துக்குள் சென்றடைந்துவிட்டனர் என்ற விடயமும் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

மகாவம்சத்தின் குறிப்புக்களின் மூலம் அக்காலத்தில்; மஹியங்கானாவுக்கும் விஜித நகரத்திற்கும் இடையில் பலமான தமிழ் அரசர்கள் இருந்துள்ளமையை அறியமுடிகிறது. அவர்களில் திட்டகத்தின் தித்தம்பன், கச்ச திட்ட கபிசீகன் போன்றோரை நான்கு மாதகாலம் போரிட்டு வென்றான் என்ற தகவல்,அவர்கள் பலமான அரசர்களாக விளங்கியதைக் காட்டுகிறது. விஜிதநகரம் கால வாவியின் வடகரையில் உள்ளது, அனுராதபுரத்திலிருந்து 24 மைலில் உள்ளது என தகவல் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வரசர்கள் இப்பகுதியில் வாழ்ந்தவர்களாக கொள்ள வேண்டியுள்ளது.

**கிரான் விஜய்**

துட்டகாமினி உறுகுணையிலிருந்து தென்கிழக்கு கரைவழியாகப் படையெடுத்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற பொழுது 32 தமிழரசரை வெற்றி கொண்டமை பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது. சகஸ்ஸவத்துப் பக்கரண என்னும் பாளி நூலும் இந்த விபரங்களைக் குறிப்பிடுகின்றன எனக்குறிப்பிடுகிறார் சி.பத்மநாதன் (2006;பக்:viii) 32 தமிழ் அரசர்கள் எனக்கூறப்பட்டாலும் மகாவம்சத்தில் 23 அரசர்களின் விபரங்கள் மட்டுமே காட்டப்பட்டுள்ளது.

மகாவம்சம் குறிப்பிடும் இந்த தமிழ் அரசர்கள் பற்றியும் அவர்கள் வாழ்ந்த இடங்கள் பற்றியும் வேறு வரலாற்றுத் தகவல்கள் எதனையும் பெறமுடியாதவர்களாகவே உள்ளோம். இவற்றைவிட, இத் தமிழ் அரசர்கள் பற்றிய தகவலில் நமக்கு ஏற்படுகின்ற பெரும் சிக்கல் அது நிகழ்ந்த காலம் குறித்ததாகும்.

எல்லாளன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த காலம் கி.மு. 204 – 164 ஆகும். துட்டைகாமியின் காலம் கி.மு. 164 -140 ஆகும். எனவே மகாவம்சம் கூறுவதன்படி துட்டகாமினி தமிழரசர்களை வெற்றிகொண்ட காலம் கி.மு. 160 களாகும் எனக்கொள்ளலாம். இக்காலம் தமிழகத்தில் எழுத்திலக்கியங்கள் வளர்ச்சியடைந்த காலமாகும். சங்க இலக்கியங்கள் எனப்படும் ஆதித் தமிழ் இலக்கியங்கள் கி.மு. 200 – கி.பி. 250 வரையான காலத்திற்குரியது என்பர் பேராசிரியர் சிவத்தம்பி (1998 பக்:17) அவர்கள். ஆனால் எல்லாளன் பற்றியும் துட்டகாமினி வெற்றி கொண்ட தமிழரசர்கள் பற்றியும் அச்சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படவில்லை. எனவே எல்லாளன் மற்றும் தமிழரசர்களும் கிழக்கிலங்கையில் வாழ்ந்த தமிழ் சிற்றரசர்கள் எனக்கொள்ள வேண்டியவர்களாகின்றோம். அதனை அறிவதற்கான தேடல்களை கிழக்கிலங்கையின் வரலாற்றுத் தகவல்களிலே தேட வேண்டியுமுள்ளது.

மட்டக்களப்பு தேசத்தில் அண்மைக்காலங்களில் அறியப்பட்டுள்ள, பெருங்கற்காலப் பண்பாட்டு காலமும் இத்தமிழரசர்கள் வாழ்ந்த காலத்திற்குரியதே. இப்பெருங்கற்காலத்தில் இருந்த வேள்புலங்கள், மற்றும் சிற்றரசர்கள் என்போர் பற்றி இப்போது அறியக்கூடியதாக இருக்கிறது. சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடும் தமிழரசர்கள் இக்காலத்தைச் சேர்ந்தவர்களா? என்பதனையும் அறிய வேண்டிய தேவையுள்ளது.

அதேவேளை, மட்டக்களப்பில் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள கி.மு.250 தொடக்கம் கி.பி. 300 வரையான காலப்பகுதிக்குரிய தமிழ்ப் பிராமி வடிங்களில் அமைந்த கல்வெட்டுக்களின் காலமும் துட்டகாமினி தமிழரசர்களை வெற்றி கொண்ட காலப் பகுதிக்குள்தான் வருகின்றன. அத் தமிழ்ப் பிராமிச் சாசனங்களில் தமிழ் அரசர்களைப் பற்றிய குறிப்புக்கள் உண்டா என அறிய வேண்டிய தேவையும் உண்டு. அவற்றில் வேள்நாகன், வேள்கண்ணன் மணிநாகன் என்ற பெயர்களே பொறிக்கப்பட்டுள்ளன.

துட்டகாமினி தமிழரசர்களை வெற்றி கொண்ட காலப் பகுதி கி.மு. 160 களாக் கொண்டால், கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதலாக கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரிய பிராகிருத மொழிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்ற தமிழர், பத, நாகர், பரதர், பிராமணர், கபோஜி, பமன என்னும் இன அல்லது சமூகப் பெயர்களால் குறிக்கப்படுவோர் யார் என்ற வினாவும் எழுகின்றது. (பக்:18); சேருவில, அக்கரைப்பற்று குடுவில், குசலான்மலை, திகவாபி போன்ற இடங்களில் தமிழரைப்பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் உள்ளன. (2016: பக் 20)

தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் குறிப்பிடும் நாகர் பெரும்பாலும் நாக வழிபாட்டு முறையைப் பின்பற்றியவர்கள். சிலர் பௌத்தர்காளாகிவிட்டனர் என்பதைக் குசலான் மலைக் கல்வெட்டுக்கள் மூலமும் கந்தரோடையிற் கிடைத்த நாணயங்கள் சிலவற்றின் மூலமும் அறிய முடிகின்றது என்கிறார் பத்மநாதன் அவர்கள் (2016: பக்:25) அத்துடன் பிராகிருத மொழிச் சாசனங்கள் குறிப்பிடும் நாகரின் சமய, பண்பாட்டு நிலைகள் பெருமளவில் வேறுபட்டனவாகும். அவற்றிலே குறிப்பிடப்படும் நாகர் அனைவரும் பௌத்த சமய ஆதரவாளர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களிற் பெரும்பாலானோர் பௌத்தராகி விட்டனர் என்றும் பத்மநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (2016: பக் 25)

மகாம்சத்தில் இப்பகுதியில் வருகின்ற கூற்றொன்று இதனை புலப்படுத்துவதாக உள்ளது. மகாவம்சத்தில் 16 ஆம் சூத்திரத்தில் '...'தன்னைச் சேர்ந்தவர்களையே யாரென்று தெரிந்துகொள்ளமல் அரசன் தன் மக்களையே கொல்கிறான்' என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்ட அரசன் இவ்வாறு பிரகடப் படுத்தினான்.' என்ற குறிப்பு உள்ளது. அதேவேளை, காமினி ஜனனம் என்ற 22 ஆவது அத்தியாயத்தின் 82 ஆவது சூத்திரத்தில் 'தமிழர்களுடன் எப்போதுமே போரிடமாட்டோம் என்று எண்ணத்துடன் இந்த உணவைச் சாப்பிடுங்கள் என்று அரசன் (காகவனதீசன்- காக்கைவண்ணதீசன்) சொன்னபோது...' என்ற குறிப்பையும் இணைத்து நோக்குவதும் தவிர்க்க இயலாததாகிறது.

மட்டக்களப்புத் தேசத்தின் வரலாறு பற்றிய புதிய தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், நம்முன்னே மேலும் அறிந்து கொள்ளவதற்கான பெரும்பணி காத்திருக்கிறது என்பதனை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

## “யாம்” படத்துக்கு விருது




தேசிய நல்லிணக்க குறுந்திரைப்பட விருது மட்டக்களப்பு இளைஞர்களின் தயாரிப்பு ஒன்றுக்கு கிடைத்துள்ளது.

இலங்கை தேசிய நல்லிணக்க அமைச்சினால், நடத்தப்பட்ட 2018ஆம் ஆண்டுக்கான குறுந்திரைப்படப் போட்டியில், மட்டக்களப்பின் “அ” கலையகத்தின் சார்பில் கிரேசன் பிரசாத்தினால் இயக்கப்பட்ட “யாம்” திரைப்படம் தேசிய நல்லிணக்கத்துக்கான முதலாவது பரிசை பெற்றுள்ளது.

இதற்கான விருது அண்மையில் நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசனால் வழங்கப்பட்டது.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## பிள்ளைகள் மனதில் பதியும் சமூகக்காட்சிகளின் தாற்பரியம்



'பிள்ளைகளின் ஆழ் மனதில் பதியப்பட்டவைகள்தான், பிள்ளைகளின் செயற்பாடுகளில் செல்வாக்கு பெறுகின்றன. பிறக்கும்போது எல்லாப்பிள்ளைகளும் ஒழுங்காகவே பிறக்கின்றனர். அவர்களின் செயற்பாடுகளுக்கு சூழலும் பெரும்பங்களிப்பு செய்கின்றது' என வேலுப்பிள்ளையும், வேலாப்போடியும் வெல்லாவெளிச் சந்தியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

பிள்ளைகளின் நடத்தைப் பற்றி ஏன் பேச ஆரம்பித்தனர், என பலரிடம் வினாவெழும்பலாம், அண்மையில் இருவரும் ஓர் இடத்தில் பிள்ளைகளினால் நடிக்கப்பட்ட நாடகமொன்றினை பார்வையிட்டுள்ளனர். அந்நாடகம் உண்மையில் மிகச்சிறப்பாகவும், உண்மை வெளிப்பாடாகவும் இருந்திருக்கின்றது. இதனை 16வயதிற்குட்பட்ட சிறுவர்களே நடித்துள்ளனர். நடித்தமை மட்டுமல்லாது இந்நாடகத்திற்கான கருவினையும் அவர்களே உருவாக்கி நடித்துள்ளனர்.

இச்செயற்பாடு சிறுவர்களது ஆளுமைத் திறனையும், நடிப்புத்திறனையும் சிறப்பாக வெளிக்காட்டியுள்ளது. இதனை ஆர்வத்தோடும் மிகுந்த அவதானிப்போடும், சூழல் நிலையோடும் ஒன்று சேர்த்து பார்த்திருந்த வேலுப்பிள்ளைக்கு நாடக நடிப்பு மீதும், எடுத்துக்கொண்ட கருப்பொருள் மீதும் சந்தோச உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. அதேவேளை கதைப்பொருளைப் பேசிக்கொண்டு நடிகர்களாக செயற்பட்டிருக்கின்றனர். இச்செயற்பாடுகள் பாராட்டுதலுக்கு உரியதாகவிருந்தன. எனக்கூற ஆரம்பித்த வேலுப்பிள்ளையின் கண்களில், முகத்தில் ஆரம்பத்தில் இருந்த மலர்ச்சி படிப்படியாக குறைய ஆரம்பித்தது.

இதைப் பாரத்துக்கொண்டிருந்த வேலாப்போடி, மகிழ்ச்சியாகத்தானே கதையை ஆரம்பித்தாய், இப்போது முகம் வாட்டமாகின்றதே, நாடகத்தினைப் பற்றி சிறப்பாகத்தானே கூறினீர்கள் என வேலாப்போடியும் தயக்கத்துடனே வினவினான். பதிலளிக்க ஆரம்பித்த வேலுப்பிள்ளையும், நாடகம் சிறப்பானதுதான் ஆனால் யாருமே சொல்லிக்கொடுக்காமல், சில பாத்திரங்களை மாணவர்கள் நிஜம் போன்று நடித்தமையென்பதுதான் மிகவும் வேதனையை கொடுத்திருந்தது. இளவயதில் திருமணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். இதனால் குடும்பத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதனையே கருப்பொருளாக கொண்டு நடித்திருந்தனர். இவ்வாறான தெளிவூட்டல் நாடகங்கள் மக்கள் மத்தியில் நடித்துக்காட்டப்பட வேண்டியதும் அவசியமானது. ஆனால், சமூகத்தில் நடக்கின்ற சம்பவங்களை அவ்வாறே நிஜமானது போன்று சிறுவர்கள் நடித்தமை சிறுவர்களின் நடிப்புத்திறனை வெளிக்காட்டினாலும், சூழலோடு

படுவான் பாலகன்

இணைத்துப் பார்க்கின்ற போது, அவர்கள் பாத்திரமேற்று நடித்த பாத்திரங்களின் மாதிரிகள் அவர்களது சூழலிலே இருக்கின்றன. அவற்றினை பார்த்த சிறுவர்களுக்கு ஆழ்மனதிலே தமது சமூகத்தின் நிலை பதிவாகியிருக்கின்றது. அவ்வாறு பதியப்பட்ட பதிவுகள் நாடகமாக வெளிவந்திருக்கின்றன.

நாடகத்தில், மது அருந்துகின்ற தந்தையாக, உறவினராக சிறுவர்கள் காட்சிகொடுத்திருக்கின்றனர். அவ்வாறு மது அருந்துபவர்கள் எவ்வாறு சமூகத்தில் நடக்கின்றனர் என்பதனை தமது நடிப்பில் வெளிக்காட்டியிருக்கின்றனர். வீட்டிலே எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன, கணவன் மனைவிக்கு இடையில், அயலவர்களுடன் எவ்வகையிலான முரண்பாடுகள் நடைபெறுகின்றன. போன்ற காட்சிகளையும் நடித்து வெளிக்காட்டியிருக்கின்றனர். இவர்களது நடிப்பு பேச்சுக்களும் தமது சூழல் பேச்சுக்களாகவே இருந்தன. இச்செயற்பாடுகள்தான் வேலுப்பிள்ளைக்கு கவலை கொடுத்தாக குறிப்பிட்டார். தமது சூழலை எவ்வாறு சிறுவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். செயற்பாடுகளை எவ்வகையில் அவதானித்துள்ளனர். என்பதனையும் சிறுவர்களின் மனநிலையையும் புரிந்து கொண்ட வேலுப்பிள்ளைக்கு முகம் வாட்டத்தினைக்கொடுக்க, பிள்ளைகளுக்கு கையைகொடுத்து வாழ்த்து கூறியவனாக, தலையை குனிந்துகொண்டே அவ்விடத்தினைவிட்டு அகன்றதாக கூறினான்.

படுவான்கரைப் பிரதேசம் கல்வியில் சிறிது சிறிதாக வளர்ந்து வருகின்ற பிரதேசமாக இருக்கின்றது. இப்பிரதேசத்தில் தீர்க்கப்பட வேண்டிய, இளவயது திருமணம், மாணவர் இடைவிலகல், தொழிலின்மை, நுண்நிதி நிறுவனங்களின் நுண்கடன் போன்ற பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்ற போது, வாழ்வாதாரத்தினை ஈட்டிக்கொள்வதற்கு குடும்பங்களுக்கு வாய்ப்பாகும். இதன் பயனாக இடைவிலகல் தவிர்க்கப்படும். கல்வியினை எல்லா மாணவர்களும் சிரமமின்றி பெற்றுக்கொள்வர். இதனால் இச்சூழல் பல்வேறு வகையிலும் வளர்ச்சியடையும். அத்தோடு சிறுவர்களின் ஆழ்மனதில் பதியப்படும் அவசியமற்ற விடயங்கள் குறைவடையும். இதற்காக மகிழ்ச்சிகரமான சூழலை படுவான்கரைப் பிரதேசத்தில் ஏற்படுத்துவதற்கு பலரும் முயற்சிக்க வேண்டும். திறமையான சிறுவர்கள் படுவான்கரைப் பிரதேசத்திலிருந்தும், சமூகத்தில் நடைபெறுகின்ற பிழையான விடயங்களில் இருந்தும், தப்பிக்கொள்ள வழிகாட்டுவதற்கு சிறுவர்கள் தலைப்பட்டும் நிற்கின்ற நிலையில், நாளைய தலைவர்களான சிறுவர்களை மகிழ்ச்சிகரமாக வைத்துக்கொள்வதற்கு எல்லோரும் கைகோர்க்க வேண்டுமென வேலாப்போடியும் கூறிவிட்டு அவ்விடத்தினைவிட்டு அகன்றான்.

---

## அற்பாயுளில் மறைந்த படைப்பிலக்கிய ஆளுமை

### கெக்கிராவ ஸஹானா



நவீன கணினி தொழில் நுட்பத்தின் வரவினால் எம்மவர்களுக்கு கிடைக்கப்பெற்ற வரப்பிரசாதம் அநேகம்! மின்னல்வேகத்தில் தொடர்பாடலை பரஸ்பரம் மேற்கொள்வதற்கு மின்னஞ்சல், முகநூல், வைபர், ட்விட்டர், வாட்ஸ்அப் , ஸ்கைப் என்பன உதவிவருகின்றன.


இந்தவாரம் அரங்கம் இதழில் வழக்கமாக நான் எழுதிவரும் மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வை தொடர்பத்தியை தவிர்ப்பதற்கு எதிர்பாராதவகையில் எம்மிடமிருந்து நிரந்தரமாக விடைபெற்றுவிட்ட படைப்பிலக்கிய ஆளுமை கெக்கிராவ ஸஹானா அவர்கள்தான் பிரதான காரணம்!


என்வசம் முகநூல் இல்லை. அதனால், சஹானாவின் மறைவு பற்றிய தகவல் முகநூலில் கணத்துக்குக்கணம் சஞ்சரிக்கும் ஒரு இலக்கிய அன்பரிடமிருந்துதான் முதலில் தெரியவந்தது. தாமதமின்றி தென்னிலங்கையிலிருக்கும் எழுத்தாளர் திக்குவல்லை கமாலை தொலைபேசியில் தொடர்புகொண்டு என்ன நடந்தது..? எனக்கேட்டேன். வட இலங்கையில் அல்வாயிலிருந்து ஜீவநதி கலை - இலக்கிய மாத இதழை வெளியிட்டுவரும் கலாமணி பரணீதரனுடன் தொடர்புகொண்டு, கெக்கிராவ ஸஹானாவின் சகோதரி எழுத்தாளர் கெக்கிராவ சுலைகாவின் தொலைபேசி இலக்கம் பெற்று உரையாடி என்ன நடந்தது? என விசாரித்து ஆழ்ந்த துயரத்தில் பங்கேற்றேன்.


எனது வாழ்வில் ஒரே ஒரு முறைதான் ஸஹானாவுடன் பேசியிருக்கின்றேன்.

அந்தச்சந்தர்ப்பமும் 2011 ஆம் ஆண்டு நாம் கொழும்பில் நடத்திய முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில்தான் கிட்டியது.

ஸஹானாவின் மறைவு எனக்குள் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. எனது பதற்றத்திற்கு காரணம் இருந்தது.







ஐம்பது வயதில் இவ்வுலகை நீத்துள்ள ஸஹானா, கெக்கிராவ என்ற இலங்கை வரைபடத்தில் எங்கோ ஒரு மூலையில் காணப்படும் பெயரை தமிழ் இலக்கிய உலகத்திற்கு அறிமுகப்படுத்தி, புலம் பெயர்ந்துவாழும் தமிழ் இலக்கிய வாசகர்களிடம் தனக்கென அடையாளத்தைப்பெற்றுக்கொண்ட இலக்கிய சகோதரி.

அநுராதபுரம் - கண்டி மார்க்கத்தில் வரும் கெக்கிராவ என்ற நகரத்தில் 1968 ஆம் ஆண்டு பிறந்து, தனது 12 வயதிலேயே இலக்கியப்பிரதிகள் எழுதத்தொடங்கி, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான மல்லிகை கலை, இலக்கிய இதழ்களை மாதம் தவறாமல் தருவித்துப்படித்து, மல்லிகைப்பந்தல் வெளியீடுகளையும் படித்து, தன்னையும் படைப்பாளியாக உருவாக்கிக்கொண்டு கல்வியிலும் முன்னேறி, ஆசிரியையாக பணியாற்றிக்கொண்டு திருமணமாகிய பின்னரும் இலக்கியத்துறையில் அயராமல் ஈடுபட்டு, பத்து நூல்களையும் வரவாக்கி , நான்கு குழந்தைகளுக்கும் தாயாகி, ஆங்கில இலக்கியங்கள் பற்றிய அறிமுக பதிவுகளும் எழுதி, சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பு, நாவல், ஆய்வு முதலான துறைகளில் ஏராளமான பதிவுளையும் வரவாக்கிய ஸஹானாவின் திடீர் மறைவு பேரதிர்ச்சியை தந்திருக்கிறது.

முருகபூபதி – அவுஸ்திரேலியா

நூலுருவில் எமக்கு கிடைத்த இவரது இலக்கிய வரவுகள்: ஒரு தேவதைக்கனவு ( சிறுகதை), இன்றைய வண்ணத்துப்பூச்சிகள் (கவிதை), ஒருகூடும்இருமுட்டைகளும் (குறு நாவல்), சூழஓடும்நதி ( ஜெயகாந்தன் படைப்புகள் பற்றிய ஆய்வு), ஊமையின்பாஷை ( சிறுகதை), இருட்தேர் ( கவிதை), மானசஞ்சாரம் ( சுயசரிதை), முடிவின்தொடங்கும்கதைகள்( சிறுகதை), அன்னையின் மகன் (நாவல்),

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## டட்லி - செல்வா ஒப்பந்தம்




தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ். ஜேவி. செல்வநாயகத்தின் உருவச்சிலை 15.10.2018ல் மட்டுநகர் வாவிக்கரை வீதியில் மிக கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையைப் பார்த்ததும் பெரியவரின் பக்கம் என் தொலை நோக்கியை திருப்பினேன்;.

டட்லி சேனநாயக்கா பிரதமராக இருந்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சி. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமை தாங்கிய கட்சி சமஸ்டிக் கட்சி. இன்று ஆட்சியில் இருப்பது ஐக்கிய தேசியக்கட்சி. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. எதிர்கட்சி சமஸ்டிக் கட்சி. எதிர்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன்.

1965.03.24 ம் திகதி இவ்விருகட்சிகளும் டட்லி - செல்வா ஒப்பந்தமென கைச்சாத்திட்ட உடன்படிக்கை என் பாதாளப் பார்வையில் பட்டது. அவ்வொப்பந்தத்தை உங்கள் பார்வைக்கு தருகிறேன்.

01. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாகவும் பதிவுகளை மேற்கொள்ளும் மொழியாகவும் ஏற்பாடளிக்க தமிழ் மொழிச்சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் பேசும் ஆள் ஒருவர் இத்தீவு அடங்கலிலும் தமிழில் தமது தொழில் நடைமுறைகளைச் செய்ய உரித்துடையவராக இருக்க வேண்டும் என்பது தமது கட்சியின் கொள்கையாகும் என திரு. டட்லி சேனநாயக்கா விளக்கினார்.

02. நீதிமன்ற மொழிச் சட்டத்தைத் திருத்தி, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளையும் அவற்றின் பதிவுகளும் தமிழில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பது தமது கட்சியின் கொள்கையாகும் என திரு.சேனநாயக்கா கூறினார்.

03. இலங்கையில் மாவட்ட சபைகளை நிறுவி, அவற்றுக்கு இரு தலைவர்களுக்கும் இடையிலும் சுமூகமாக உடன்பட்டுக் கொள்ளப்படவுள்ள விடயங்கள் மீதான தத்துவங்களை உடைமையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வாறாயினும் தேசிய அக்கறையின் கீழ் அத்தகைய சபைகளுக்கு பணிப்புரைகள் வழங்கும் தத்துவத்தை அரசாங்கம் சட்டத்தின் கீழ் கொண்டிருத்தல் வேண்டும் என உடன்பட்டுக் கொள்ளப்பட்டது.

04. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தினைத் திருத்தி, இலங்கைப் பிரஜைகள் அக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி ஒதுக்கப்படுவதற்கு உரித்தாவதற்கு ஏற்பாடளிக்க வேண்டும். குடியேற்றத் திட்டங்களின் கீழ் காணிகள் வழங்கப்படுகையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் பின்வரும் முன்னுரிமைகள் அவதானிக்கப்படும் எனவும் திரு.டட்லி சேனநாயக்கா மேலும் உடன்பட்டார்.

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கும் காணிகள், முதற்கண், அம் மாவட்டதில் உள்ள காணியற்ற ஆட்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழ் பேசும் ஆட்களுக்கு.

(இ) மூன்றாவதாக தீவின் எஞ்சிய பாகங்களில் வதியும் தமிழ் குடிபதிகளுக்கு முன்னுரிமையளித்து, இலங்கையிலுள்ள ஏனைய குடிபதிகளுக்கு. (இந்த உடன்படிக்கை அரசகரும ரீதியில் ஒருபோதும் வெளியிடப்படவில்லை. இது இலங்கை பத்திரிகைகளில், வெளிவந்தது).

## நாமும் செய்யலாமா ?



ஒரு நாடு நன்றாக இருக்க வேண்டுமானால் அந்த நாட்டின் விவசாயமும், விவசாயிகளும் நன்றாக இருக்க வேண்டும். இன்று நம் நாட்டில் படித்த பட்டதாரிகள் நிறையப்பேர் வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் நிறையவே மனச் சோர்வுடன் வீட்டில் முடங்கிக் கிடப்பதை பார்க்கலாம். இளைஞர்களே உங்கள் காலடியில் உள்ள மண்ணில் உங்கள் மனச் சோர்வுகளைப் பகிருங்கள், புரியவில்லையா?

### சியாமளா ஆனந்தா

படித்த உங்களை போன்றோர்தான் விவசாயத்தில் பல சாதனைகளை வெளிநாடுகளில் செய்து கொண்டு இருக்கிறார்கள். காரணம் கடந்த சில ஆண்டுகளாக பாவிக்கப்பட்ட கிருமி நாசினிகள் இன்று விவசாய நிலத்தையும் சரி நம் உடல் ஆரோக்கியத்யையும் சரி பாதிப்புக்குள்ளாக்கி உள்ளன. இதை நாம் தினசரிப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலமாக படித்தும், கேட்டும், பார்த்தும் கொண்டிருக்கிறோம். ஆகவே இதற்கு நாம் முற்றுப்புள்ளி வைத்து ஆரோக்கியமான வாழ்க்கையை நமது அடுத்த சந்ததியினருக்கு கொடுத்தாக வேண்டும். ஆகவே இதன் முழுப்பொறுப்பும் படித்த பட்டதாரிகளாகிய உங்கள் கையில் தான் உள்ளது.


நீங்கள் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு விவசாய நிலங்கள் மேம்படுவதோடு அல்லாமல் வேலையில்லாமல் திண்டாடும் எங்கள் கிராம ஏழை விவசாயிகளுக்கும் வேலை வாய்ப்பை கொடுக்கக் கூடியதாக இருக்கும். அதுமட்டுமல்ல எத்தனையோ ஏற்றுமதி வாய்ப்புக்கள் உணவு சந்தையில் உள்ளன. உணவு பதப்படுத்தலை உள்ளூர் கிராமங்களில் செய்வதால் உணவு விலைகளை நீங்களே நிர்ணயம் செய்து நீங்களே சந்தைப்படுத்தும் வாய்ப்புக்கள் கிடைத்தால் இடைத்தரகர்களிடம் இருந்து விவசாயிகளை காப்பாற்றலாம். விவசாயத்திற்கு ஈடாக எதையும் நாம் மாற்றீடு செய்ய செய்ய முடியாது. உணவு இல்லாமல் உலகம் இல்லை.

## வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 33

மட்டக்களப்புக்கென்றே சில தவண்டையடிச்ச சேதியள் இருக்கு ஆனா எல்லாத்தையும் எழுத ஏலாது. எல்லாத்தையம் சொல்லவும் ஏலாது. பின்ன நீங்களா நெச்சுப் பாருங்க ஒருத்தன்ர முகத்துக்கு நேராப் பேச ஏலாத விசியங்கள் கடுதாசியில எழுதி எம்பலப்புக்க வச்சு அனுப்பிப் போடலாம். அதே போல சில எழுதேலாத விசியங்கள் நெத்திக்கு நேர பேசினாத்தான் மன ஆறுதல்.

பின்ன நீங்க உலகமெல்லாம் சுத்தித் திரிஞ்சாலும், நல்ல தமிழ் எண்டது மட்டக்களப்பு நாட்டாற்ற கதைவழிய இருக்கு. இல்லண்டா அதை நல்ல தமிழெண்டு சொல்லுறது கூட, அந்த சனத்துக்கு தெரியாது. ஏதோ போற போக்கில பேசிற பேச்சித்தான். எங்கட வாமன்ட மனிசி சிங்களப் பொம்புளை. ஏதோ மெனிக்கா எண்டுதான் பேராம். ஆனா அவா இப்ப தன்னை கண்மணியெண்டுதான் சொல்லுறவா. அவாட கதையிலகூட அவா சிங்களத்தி எண்டது தெரியாது. நல்ல வளப்பமான சாதியில பொறந்த வாமண்ணைக்கு எப்பிடியோ கிளி மாதிரி ஒரு பொண்டாட்டி இருக்க, குரங்கு மாதிரி ஒரு வைப்பாடிச்சி தேவைப்பட்டிட்டுது, அவன்ர மச்சாங்காரன் அதான் மனிசிட தமையன். ஆரோ மந்திரவாதியளோட தொடுப்பாம் ஏதுஞ் செய்து போடுவன் எண்ட பயக் கெடுதியில வாமன் அப்பவே கண்மணியக்காவ வவுனியாவுக்கு கொணந்திட்டார். கண்மணியக்காவும் நானும் நல்ல சிநேகிதம் எப்பிடியெண்டா நானும் அவவும்தான் கூடி வேலைக்குப்போறது. கடலை போடுறது. மந்து கொத்துறது. எண்டு எல்லாவேலைக்கும் சாரி கட்டிப் போவம். வாமண்ணண்ட காலில ஆணி. ஆள் தாண்டித்தாண்டித்தான் நடப்பார்.



அவருக்கும் அவரிட மூத்தண்ணருக்கும் ஒரு பெரிய பிரச்சனை வந்திட்டுது. எப்பிடியெண்டா அவர் கொண்டு வந்த இந்த கண்மணியக்காவாலதான். இவா ஒரு சின்ன மனிசி. எனக்கு தெரிஞ்ச சிங்களப் பொம்புளையள் தமிழரக்கட்டினவை அநேகமா குள்ளமாத்தான் இருக்கினம். கண்மணியக்கா குள்ளம் மட்டுமில்ல உருவத்திலும் அஞ்சாம் வேப்பு படிக்கிற பெட்டையளின்ர அளவுதான். ஆள் கவுண் போட்டா அப்பிடித்தான் ஆரும் நெப்பினம்.

அது கிடக்கட்டும், இப்ப கனகையா அதான் வாமண்ட அண்ணங்காரன் கண்மணிய தனக்கு விட்டுக் குடுக்கச் சொல்லி கேட்டிருக்கிறான். இது அந்தநாளையில சகசமான கததான், அவங்கட சனத்துக்க முன்னமும் கனகையா கொணந்த பொம்புளய அவன்ர மச்சானுக்கு குடுத்திருக்கிறான். அந்த பொம்புளைய போட்டிட்டு வேற ஒரு அன்ராசபுரத்தில் பொம்பிளைய கொணந்து,

அதையும் எங்கட பக்கத்து வீட்டு சின்னப்புவுக்கு குடுத்தவன். இப்ப வாமண்ட மனிசிய கேக்கிறான். அதுகிடக்க வருசந்தீவாளியெண்டா இவை பழைய புருசன்ர வீடுகளுக்கும் தம்பதி சமேதரா விருந்துக்குப் போய் வாறவை ஊரே வேடிக்கை பாக்கும். அதால வாமண்ட மனிசிய கனகய்யா கேட்டதில பெரிசா தப்பில்ல எண்டுதான் படுது. ஆனா அது இப்பிடி கொலயில முடியுமெண்டு ஆரும் நெச்சுப் பாக்கேல்ல. பெண்ணாசை பெரிய பெரிய போருகளையே நடத்தியிருக்கு. இதுகும் அது போலதான் எண்டு விட ஏலாது. இது ஒரு சொறிஞ்ச விசயம்.

சும்மாவே சொல்லுறது. உலகத்திலயே சொறியற வியாதிதான் சுகமான வியாதி எண்டு. என்ன... கதவுக்குப் பின்னால நிண்டு கொண்டு பல்ல ஈயெண்டு பிடிச்சுக் கொண்டு ரெண்டு கையாலயும் சொறிய சொறிய என்ன சுகமா இருக்கும். சொறியச் சொறிய சுகமா இருக்கும். சொறிஞ்ச இடம் புண்ணாகி புண் படுவனாகி படுவன்முத்தி ஆளைக் கொண்டு போடும். அது போலதான் கனகையா அண்டைக்கு ஏதோ வழமைபோலதான் தண்ணியடிச்சிட்டு வந்தான். தன்ர குடிலுக்கு முன்னால கண்மணி இருந்து தலையைக் கோலிக் கொண்டிருந்தாள். சும்மா சொல்லக்கூடாது. அவளுக்கு கூந்தலும் பரட்டைபத்தின சுருண்ட இருண்ட மயிர்தான். அள்ளிக் கொண்டை போடஏலாது. அங்கால இஞ்சால திரும்பி அறுவத்தினாலு கிளிப்பச் சொருகி, அதை அவள் கட்டுற அழகிருக்கே கனகையன்ர போதை தலைக்கேறிட்டுது. அவன்பாட்டில பின்னால போய் அவளை அலாக்'கா தூக்கி தன்ர வீட்டைநோக்கி கொண்டு நடக்க, அவள் குழாறின சத்தம் ஊரெடுபட்டிட்டுது. வாமன் பக்கத்தில கிடந்த மண்வெட்டியத் தூக்கிக் கொண்டு பாஞ்சு வந்த கோலம் இருக்கே இன்னும் கண்ணுக்க நிக்குது. ஒரே போடு. கனகையன் கையவிட, கண்மணி கீழ நழுவ, மண்வெட்டி அவளின்ர தோளில விழ, கனகையன் இழுக்க கண்மணியின்ர மண்டையில வாகா விழுந்த வெட்டில பாவம் கண்மணி கண்ண மூடிற்றாள். கனகையாவா வாமனா கொலையாளி... (யோசிப்பம்)

### தமிழ்க்கவி


அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்
கேதார கௌரி விரத ஆரம்பம் - 2018
கேதார கௌரி விரதத்தினை அனுட்டிக்கும் அன்பார்ந்த அடியார்களே!
ஐப்பசி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை தசமி திதியில் இவ்விரதம் ஆரம்பமாகி கார்த்திகை மாதம் 7ஆம் திகதி புதன்கிழமை, அமாவாசை திதியில் விரதம் நிறைவடைய இருக்கிறது. ஆகவே கேதார கௌரி விரதத்தை அனுட்டிக்கும் அடியார்கள் 19/10/2018 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வீட்டில் கும்பம் வைத்து விரதத்தினை ஆரம்பிக்கலாம்.
(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)


NIRUTHA
HOTEL
NIRUTHA
E-mail: info@hotelnirutha.com
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com
அரங்கம் செய்திகளுக்கான ஆதரவில் கைகோர்ப்போம்' - ஹொட்டல் நிருத்தா
Hotline: +94 717 412 292

# மட்டு மாநகரசபை

## தனியார் பஸ் நிலையத்துக்கு புதிய கட்டிடம்



மட்டக்களப்பு நகருக்காக தனியார் பஸ் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான முயற்சியில் மட்டக்களப்பு மாநகரசபை இறங்கியுள்ளது.

தற்போது அரச பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள இடத்தில் தனியார் பஸ்கள் நிறுத்தப்படுகின்ற போதிலும் அந்தப் பகுதி போதுமான வசதிகள் எதுவும் இன்றியே காணப்படுகின்றது. பயணிகள் தங்குவதற்கு ஏற்பாடுகளும் கிடையாது. அதேவேளை முன்னைப் போலல்லாது, தனியார் போக்குவரத்து பஸ்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

தனியார் பஸ்களின் சேவையும் பல தடங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேவைகளை கருத்தில்கொண்டு அரசாங்க பஸ் நிலையத்துக்கு அருகாமையிலேயே 6 கோடி ரூபாய்கள் பெறுமதியில் தனியார் பஸ் நிலையம் ஒன்றை கட்ட மாநகர சபை முடிவு செய்துள்ளது.

இந்த கட்டிடத்துக்கான நிதியை நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்கவுள்ளது. பயணிகள் தரித்து நிற்பதற்கான வசதிகளும் கடைத்தொகுதிகளும் உள்ளடங்கியதாக இந்த பஸ் நிலையம் அமைக்கப்படும் என்றும் அடுத்த வருடத்தில் அது திறக்கப்படும் என்றும் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கூறினார்.

அதிகரித்துவரும் பொதுமக்கள் தேவையை கருத்தில்கொண்டு இந்த பஸ்நிலையம் அமைக்கப்படுவதாக கூறிய அவர், பயணிகளின் வசதிக்காக அரசாங்க மற்றும் தனியார் பஸ் நிலையங்கள் இணைக்கப்பட்ட ஒன்றாக அமையும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தில் அதற்காக இரு கோடி ரூபாய்களும் அடுத்த வருடத்தில் 4 கோடி ரூபாய்களும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சரவணபவன் குறிப்பிட்டார்.
இந்த தனியார் பஸ் நிலையம் இரு மாடிகளைக் கொண்டதாக அமையும்.

மட்டக்களப்பின் தற்போதைய அரசாங்க பஸ் நிலையத்தை பொறுத்தவரை அங்கு அமைக்கப்பட்டுள்ள மேல்மாடிக்கடைகள் எவரும் பயன்படுத்தாமல் கிடப்பது குறித்து கேட்டதற்கு பதிலளித்த சரவணபவன், உண்மையில் மட்டக்களப்பு சந்தையிலும், அப்படியாக சில கடைகள் பயன்படுத்தப்படாமல் கிடப்பதையும் சுட்டிக்காட்டி, இதற்காக கடை நடத்துபவர்களை கவரும் வண்ணம் சில நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அப்படியான கடைகளை நடத்த சரியான ஆட்களை கண்டு அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பஸ் நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்ததாரரிடம் அதற்கான ஆவணங்கள் கையளிக்கப்படவிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

**லியோண்**

## மட்டக்களப்பின் அழகையும் எழிலையும் வெளிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சி



மட்டு மாநகர சபையினால் மட்டக்களப்பின் அழகையும் எழிலையும் வெளிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சி வெள்ளியன்று காந்திப் பூங்காவில் உள்ள Batticaloa gate அருகாமையில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இதில் பல தரப்பட்ட புகைப்படங்களுடன், மட்டக்களப்பின் கலாசாரம், மக்களின் வாழ்க்கை, இயற்கை அழகு ஆகியவற்றை பிரதிலபலிக்கும் புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்படும்.

இந்த கண்காட்சியானது மட்டு ஆணையாளர் கே. சித்திரவேல், மட்டு மேயர் தி.சரவணபவன் மற்றும் துணை ஆணையாளர் என். தனஞ்செயன் ஆகியோர் தலைமையில் நடைபெறுகின்றது

## மாநகரசபையின் புதிய சந்தைக்கட்டிடம் திறப்பு



மட்டக்களப்பு மாநகரசபையின் புதிய சந்தைக் கட்டத்தினை எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் திறந்து வைத்தார்.

மட்டக்களப்பு மாநகரில் 3 கோடி ரூபாய்கள் செலவில் அமைக்கப்பட்ட புதிய நகரப் பொதுச் சந்தைக் கட்டத்தினை எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் கடந்த திங்கட்கிழமை காலை திறந்து வைத்தார்.



கட்டடத்தினைத்திறந்து வைத்த எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் சந்தையைச் சுற்றிப் பார்வையிட்டதுடன், வியாபாரிகளுடனும் கலந்துரையாடி அவர்களது தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இப் புதிய கட்டத்திறப்புவிழாவில் வரவேற்புரையினை மாநகர சபை ஆணையாளர் கே. சித்திரவேல்



நிகழ்த்தினார்.

கௌரவ அதிதிகளாக மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், மட்டக்களப்பு மாநகர சபை பிரதி முதல்வர் க.சத்தியசீலன், முன்னாள் கிழக்கு மாகாண சபை விவசாயத்துறை அமைச்சர் கி.துரைராஜசிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், மட்டக்களப்பு வலயக்கல்விப்பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## நூலகம் - நூலகர் - வாசகர்

வாசிப்பு குறைகிறது, வாசகர் வருகை குறைகிறது என்பது இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் உள்ள நூலகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை. அதே பிரச்சினையை மட்டக்களப்பு மாநகர சபையின் நூலகமும் எதிர்கொள்கிறது.

இது மிகுந்த கவலைக்குரிய நிலவரம் என்கிறார் மாநகர நூலகத்தின் தலைமை நூலகர் திருமதி கே. ருத்ரகுமார். கணினிகள், குறிப்பாக செல்லிடத் தொலைபேசிகளின் பயன்பாடு நூல்களைத்தேடி வாசிக்கும் பழக்கத்தையும் நூலகங்களை தேடி வாசகர் வருவதையும் குறைத்து விட்டது என்பது அவரது கவலை. ஆனால், உண்மையில் இன்னமும் புத்தகங்களை தேடி வாசிப்பதே மனிதனை ஆழமானவனாக மாற்றும் என்கிறார் அவர்.

தற்போது வாசிகசாலைக்கு வருபவர்களில் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்குள் மாட்டிக்கொள்ளாதவர்களே, வயதானவர்களே அதிகமாம். அதனைவிட, பரீட்சைக்கு படிக்கும் பாடசாலை மாணவர்களும், மருத்துவக்கல்லூரி மாணவர்களும் நூலகங்களை தேடுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால், வருங்கால சமூகத்தை வாசிப்புக்கு வசப்படுத்தும் போதுதான்



அவர்கள் அறிவுஜீவிகளாக வருவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். அவர்களைக் கவருவதற்கு பல திட்டங்களை போடுவதாக கூறுகிறார் திருமதி ருத்ரகுமார்.

மாணவர்களுக்கான நூலக உறுப்புரிமையை அதிகரிக்க, நூல்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, அவர்களை கவருவதற்கான சில நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய அவர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த வாசிப்பு மாதத்தில் 300 ரூபாவாக இருந்த நூலக உறுப்புரிமை கட்டணத்தை வாசிகசாலை 150 ரூபாவாக மாற்றியுள்ளது.

பிந்தங்கிய இடங்களுக்கும், அங்குள்ள பாடசாலைகளுக்கும் நடமாடும் நூலக சேவையை அனுப்ப மாநகர நூலகம் முயல்கிறது. முயற்சி திருவினையாக்கட்டும். வாசிப்பு பழக்கம் அதிகரிக்கட்டும்.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# விளையாட்டு

## மட்டு நகரின் கால் பந்தாட்டத்தில் தடம்பதித்த திரு. பெர்ணாண்டோ




மட்டு நகரின் கால்பந்தாட்டத் துறையில் 1970, 80கள் முக்கியத்துவம் பெற்ற காலமாகத் திகழ்ந்துள்ளமை நாம் அறிந்ததே. இக்காலப் பகுதியில் களமாடிய மட்டக்களப்பு மாவட்டக் கால்பந்தாட்டத் தெரிவு அணி பலமான வீரர்களைக் கொண்ட அணியாகத் திகழ்ந்துள்ளது. இதன் காரணமாக இலங்கையின் கால் பந்தாட்ட வரலாற்றில் மட்டக்களப்பு கால்பந்தாட்டத் துறை கவனிப்பிற்குரியதாக மாற்றம் பெறும் ஏதுநிலைகள் வாய்க்கப்பெற்றன.

இவ்வாறு மட்டுநகரின் கால்பந்தாட்டத்தினை தேசிய மட்டத்தில் கவனிப்பிற்குரிய துறையாக மிளிரச் செய்வதில் பங்களிப்புச் செய்த அக்காலத்தைய வீரர்களையும் அவர்களது நினைவுகளையும் பகிர்ந்து பதிவாக்கம் செய்யும் நோக்குடன் அரங்கம் பத்திரிகையில் இப்பத்தி எழுதப்படுகின்றது.

அந்த வகையில் 1970 களில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட தெரிவு அணியில் முக்கிய வீரராகத் திகழ்ந்த வீரராக திரு. பெர்ணாண்டோ அவர்கள் விளங்கினார். இந்த மகத்தான வீரன் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இவ்வுலகை விட்டுப் பிரிந்து விட்டார். அவர் பிரிந்தாலும் அவரின் நினைவுகள் கால்பந்தாட்டத்தின் ஊடாக நம்மிடையே நிலைத்துள்ளன.

மட்டக்களப்பு பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தின் அங்கத்தவராக விளங்கிய பெர்ணாண்டோ அவர்கள் கால்பந்தாட்டத்தை மிகவும் நேசித்ததுடன், பாடுமீன் கழகத்தின் மானசீகமான அங்கத்தவனாக வாழ்ந்து தனது கால்பந்தாட்டத்தை விருத்தி செய்தார்.

1990 களின் பின்னர் மட்டுநகரின் கால்பந்தாட்டத்துறை பல சவால்களை எதிர் கொண்ட காலத்தில் தான் ஒரு பயிற்சியாளனாக இயங்க வேண்டிய வயதுக் கட்டத்தில் காலத்தின் தேவையை உணர்ந்து இளம் வீரர்களை வழிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாக பாடுமீன் அணிக்காக போட்டிகளில் தானும் ஒரு வீரனாகப் பங்குபற்றினார். பெர்ணாண்டோ அவர்கள் 1990 களில் பெரும்பாலும் மத்திய கள வீரராக பாடுமீன் அணிக்காக விளையாடினார். கால்பந்தாட்ட விளையாட்டினைப் பொறுத்த வரையில் மத்தியகளத்தில் ஆடும் வீரர்களின் திறனும் சாதுரியமுமே முன்கள வீரர்களின் பேறுபெறுகளுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கக் கூடியதாக இருப்பதனை அறிவோம்.

அந்த வகையில் திரு பெர்ணாண்டோ அவர்கள் ஒரு சிறந்த மத்திய கள வீரராக நுட்பமான பந்துப் பரிமாற்றுனராகத் தனது திறமையினை வெளிப்படுத்தியவர். இதன் காரணமாகவே சற்று வயது முதிர்ந்த நிலையிலும் அவரைத் தவிர்க்க முடியாத வீரராகக் களமாடச் செய்தது எனலாம்.

திரு பெர்ணாண்டோ அவர்கள் தான் கால்பந்தாட்டத்தை நேசித்த காலத்தில் பிற்பகல் வேளையில் நாள் தவறாது வெபர் மைதானத்திற்கு வருகை தந்து கால்பந்தாட்டப் பயிற்சிகளில் ஈடுபடுவார். தானும் பயின்று தனது கழகத்தின் இளம் வீரர்களையும் பயிற்றுவிப்பதில் மிகவும் கவனம் எடுப்பார். பயிற்சி முடிந்தவுடன் வீடு செல்லாது மைதானத்தில் நடைபெறும் கால்பந்தாட்டப் போட்டிகளைப் பார்வையிட்டு, அப்போட்டிகளில் திறமையாக விளையாடிய வீரர்களின் ஆட்டங்களைச் சுட்டிக் காட்டித் தனது கழகத்தின் இளம் வீரர்களுடன் உரையாடி கால்பந்தாட்டம் தொடர்பான கற்பித்தலில் ஈடுபடும் ஒரு மூத்த வீரராகத் தனது பிந்திய கால்பந்தாட்ட வாழ்நாட்களில் அவர் இயங்கினார்.

திரு. பெர்ணாண்டோ அவர்களின் குடும்பமே ஒரு கால்பந்தாட்டக் குடும்பமாக வாழ்ந்து மட்டுநகரின் கால்பந்தாட்டத் துறைக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளமை விசேட அம்சமாகும். மட்டு நகரின் கால்பந்தாட்டத்தில் பிரகாசித்துத் தேசிய மட்டத்தில் அறியப்பட்ட கெனடி அவர்களும், வின்சன், சாள்ஸ் ஆகிய வீரர்களும் இவரின் சகோதரர்களாவர்.

இவ்வாறு தனது வாழ் நாளில் தனது குடும்பத்தாருடன் சேர்ந்து மட்டு நகரின் கால்பந்தாட்டத்திற்கு வளம் சேர்த்த அமரர் பெர்ணாண்டோ அவர்களையும் அவருடைய நிழலிலும் வழிகாட்டலிலும் வளர்ந்து தடம் பதித்த கால்பந்தாட்ட வீரர்களையும் கௌரவப்படுத்துவோம்.

## வேலூர் விபுலானந்தா கிண்ணத்தை வென்ற நாவற்குடா நியு கிறீன் லைட்



வேலூர் விபுலானந்தா கிண்ணத்தை வென்ற நாவற்குடா நியு கிறீன் லைட் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள ஏ மற்றும் வி பிரிவுக் கழகங்களின் அணிகளுக்கிடையிலான அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 13, 14 ஆம் திகதிகளில் வேலூர் விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு சீலாமுனை யங்ஸ்டார் கழக அணியும், நாவற்குடா நியு கிறீன் லைட் கழக அணியும் தெரிவாகின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இருபது நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இறுதிப் போட்டியில் 2:1 எனும் பேறுகளால் வெற்றி பெற்று நியு கிறீன் லைட் கழகம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இச்சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தை யங்ஸ்டார் அணியும், மூன்றாமிடத்தை பாடுமீன் கழக அணியும், நான்காமிடத்தை ஸ்ரீ முருகன் கழக அணியும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவிற்கு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு மா.உதயகுமார் அவர்களும், தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் கிழக்கு மாகாண இணைப்பாளர் திரு.கணேசமூர்த்தி கோபிநாத் அவர்களும், மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் சுற்றுப் போட்டிக் குழுத் தலைவர் திரு. பொ.மேர்வின் அவர்களும் மற்றும் விபுலானந்தா விளையாட்டுக் கழக மூத்த உறுப்பினர்களும் வருகை தந்து வெற்றி பெற்ற கழகங்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தார்கள்.

துரைராஜா கௌரீசன்

## பாசிக்குடா மரதன்



கிழக்கின் உல்லாசபுரியான பாசிக்குடா கடற்கரையில் சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் குறும் தூர மரதன் ஓட்டம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. இந்நிகழ்வினை சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு நல்லினக்க பிரதி அமைச்சர் அலிசாஹிர் மௌலான ஆகியோர்கள் ஆரம்பித்து வைத்தனர்.

கடந்த 11.10.2018 ஆம் திகதி மட்டக்களப்பில் ஆரம்பமான Raid amazons எனும் விளையாட்டு நிகழ்வு 18 .10.2018 ஆம் திகதியுடன் பாசிக்குடா கடற்கரையில் முடிவடைந்தது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ZBO என்ற சுற்றுலா நிறுவணமும் இலங்கையைச் சேர்ந்த CONNAISSANCS என்ற நிறுவணத்துடன் இணைந்து இப்போட்டி நிகழ்சியை ஏற்பாடு செய்திருந்தது. இதில் கிரிக்கட், படகுப் போட்டி, நீச்சல், மரதன் என பல்வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இன்றைய மரதன் ஓட்டப் போட்டியில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 267 பெண் போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இவர்களுடன் இலங்கையைச் சேர்ந்த 3 பெண்களும் பங்குபற்றியிருந்தனர்.

கல்குடா கிராமசேவகர் பிரிவிலுள்ள கல்மடுவில் காலை 6..45 மணிக்கு ஆரம்பித்த போட்டியாளர்கள் விநாயகபுரம், பேத்தாழை, கருங்காலிச்சோலை ஆகிய கிராமங்கள் ஊடாகச் சென்று மீண்டும் பாசிக்குடா கடற்கரையினை காலை 7.50 மணிக்கு சென்றடைந்தனர்.

## ஜெயசூரிய மீது குற்றச்சாட்டு

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சனத் ஜெயசூரியா மீது சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஊழலுக்கு எதிரான நடத்தைவிதிகளை மீறிவிட்டதாக குற்றம் சுமத்தியுள்ளது.

49 வயது முன்னாள் ஆல் ரவுண்டரான ஜெயசூரியா இதுகுறித்த விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டார்.

ஆதாரங்களை மறைப்பதாகவும் அல்லது அழிப்பதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் தேர்வு குழு உறுப்பினராக இருந்த ஜெயசூரியா புகழ்பெற்ற கிரிக்கெட் வீரராக பாராட்டப்பட்டவர். இந்த குற்றம் குறித்து பதிலளிக்க ஜெயசூரியாவுக்கு 14 நாட்கள் அளிக்கப்பட்டுள்ளது.

445 சர்வதேச போட்டிகளில் விளையாடிய ஜெயசூரியா, 21 சதங்களையும், 323 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். 1996ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கோப்பையை கைப்பற்றிய இலங்கை அணியில் இடம்பெற்றவர் ஜெயசூரியா.

110 டெஸ்ட் போட்டிகளில் 40.07 ரன்களை சராசரியாக வைத்திருந்தார். சர்வதேச போட்டிகளில் இருந்து 2011ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார் பின் 2012ஆம் ஆண்டு வரை 20-20 போட்டிகளில் விளையாடினார் ஜெயசூரியா.

இந்த மாத தொடக்கத்தில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் ஊழல் தடுப்பு பிரிவு இலங்கையில் எழுந்துள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கப் போவதாக தெரிவித்திருந்தது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

# மட்டக்களப்பின் பிரதான பண்பாடொன்றை அழிக்க வரும் முப்பெரும் பேரலைகள்-2




இரண்டாம் அலை சமஸ்கிருதமயமாக்கம்

மட்டக்களப்பின் பழைய வழிபாட்டு முறைகளும் தெய்வங்களும்அண்மைக் காலமாக பெருமளவு சமஸ்கிருத மயமாக்கம் பெற்றுவருவதை எவரும் இலகுவாக கண்டு கொள்வர். சமஸ்கிருத மொழியில் வழிபாடுகள் செய்வதும் ஆகம முறை வழிபாடுகளும் கிரியைகளும் பிராமணர் பூசையும் இணைந்ததாக மட்டக்களப்பின் கோயில் வழிபாடுகள் மாறி வருவதை நாம் சமஸ்கிருத மயமாக்கம் எனலாம்.

யாழ்ப்பாணத்தில் இத்தாக்கம் 13ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பமானதாயினும் மட்டக்களப்பு வழிபாட்டு முறைகளில் பரவலாக பிராமணியச் செல்வாக்கு அதிகளவு இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. சைவமதம் பிறசைவமதமாகவே இங்கு நிலை பெற்றிருந்தது. சைவக்குருமாரே அங்கு பூசை புரிந்தனர். அட்சரச் செப்புத் தகடும், கும்பமும், சூலமும், முகக்களையும் வைத்து வணங்கிய நிலை மாறி உருவச் சிலைகள் மூலஸ்தானங்களில் அமர்த்தப்பட்டனர். வருடந்தோறும் கதவு திறந்து தெய்வமாடுவதுடன் சமஸ்கிருத மொழியிலான தினப்பூசைகள் பழைய கோயிலுக்குள் நுழைந்தன. சுவாமிக்கும் பக்தனுக்கும் இடையில் ஒருவர் வந்து விடுகிறார் அவரே பக்தர்கள் பற்றி சுவாமிக்கு எடுத்துரைக்கிறார். அம்மன் சடங்குகள் யாவும் அம்மன் விழா என அழைக்கப்படுகின்றன. கோயிற் கோபுரங்கள், கும்பாவிஷேகம் என புதிய பண்பாடு மட்டக்களப்புக்குள் புகுகின்றது. இன்று புதிது புதிதாக வந்து விட்ட பாற்குட பவனி, எண்ணெய்க்காப்பு என்பவற்றை இப்பின்னணிகளில்தான் நாம் புரிந்து கொள்ள முடியும்.

மட்டகளப்பில்சமஸ்கிருத மயமாக்கம் ஆரம்பத்தில் மேட்டுக்குடியினர் மத்தியிலிருந்து கோயில்களிலும் நகரம் சார் கோயில்களிலுமே நடந்தன. இன்று குக்கிராமங்கள் வரை நடைபெற ஆரம்பித்துவிட்டன. தம் இயல்புக்கு மீறிய செலவை இவற்றால் இக்கிராமக் கோயில்கள் சந்திக்க வேண்டியுள்ளன.

மூன்றாவது அலை எலக்ரோனிக் மயமாக்கம் இப்போது நாம் பன்னாட்டு நிறுவனங்கள் அதிகாரம் செலுத்துகிற உலக மயமாக்கல் யுகத்தில் வாழ்கிறோம்.

மின்சாராத்தால் விளைந்த அற்புதங்கள் போல் எலக்ரோனிக்கினால் மின்னஞ்சல்களால் அற்புதங்கள் நிகழும் உலகில் வாழ்கின்றமை. தொலைக்காட்சி, ரெலிபோன் போன்ற வியப்புக்களையும் தாண்டி கொம்பியூட்டர், செல்போன், ஐபேட் என பெருவியப்புக்கள் தோன்றுகிற காலத்தில் வாழ்கிறோம்.

ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ளவர்கள் கொம்பியூட்டர் அல்லது ஐபேட் திரையில் தோன்றி நம்முடன் நேருக்கு நேர் உரையாடுகின்றனர். தொடர்புகள் அனைத்தும் மனிதத் தொடர்புகளாயில்லை. இயந்திரத்தினூடாக கொள்ளும் தொடர்புகளாகி விட்டன.

குழந்தைகள் தொலைக்காட்சிப்பெட்டியின் முன் அமர்ந்து உயிருடைய ஏனைய மனிதரோடு தொடர்பு கொள்ளலாம். தொலைக்காட்சியில் வரும் நிழல் மனிதருடனும் அசையும் காட்டூன் மனிதருடனும் தொடர்பு கொள்கின்றார். தகவல் தொழிநுட்பத்தை கற்பதே கல்வி என்ற நிலையும் உருவாகி விட்டது. இதனால் எமது இளம் சிறார்கள் யாவரும் மனதில் ஈரமற்ற றோபோக்களாக உருவாக்கப்படுகிறார்கள். கோயிலும் இதற்கு விதிவிலக்காக முடியுமா?

மனிதரோடு மனிதர் உறவாடும் கோயில் நிகழ்த்தும் கலைகளான கூத்தும், கரகமும்



நாடகமும் போய் விட்டது.
அதன் இடத்தை தொலைக்காட்சிப் பெட்டியும், டெக்கும் பிடித்துக் கொண்டன. சூரன் போர் மக்கள் பங்கு கொள்ளும் பெருநிகழ்வாகும். அதனையும் சூரனையும் கொம்பியூட்டரில் இயங்கும் காலம் வெகு விரைவில் வந்து விடும்.

இம் மூன்று பேரலைகளாலும் மட்டக்களப்பின் இந்து மதம் பெருமளவு மாறி வருகின்றது.

பண்டைக் காலத்தில் ஏற்பட்ட ஆரியத் தெய்வ வருகையும், பௌத்த மத வருகையும் பெருமளவு அன்று தாக்கமேற்படுத்தவில்லை. ஆனால் மேற்கு மயமாக்கமும், சமஸ்கிருதமயமாக்கமும், எலக்ரோனிக்மயமாக்கமும் பெரும் தாக்கங்களை நமது பண்பாட்டிலும் வழிபாட்டிலும் ஏற்படுத்தி வருகின்றன.

இவற்றினின்றுமீளும் வழி யாது? என்பது எம்முன்னுள்ள பெருவினவாகும். 21ம் நூற்றாண்டில் மட்டக்களப்பின் பண்பாடும் மதமும் அதன் வழிபாடுகளும் அம்முப்பெரும் பேரலைகளை எதிர் கொள்கின்றன. பேரலை போல நம்மையும் நம் சந்ததியினரையும் விழுங்க வரும் இப்பேரலைகளை எவ்வாறு எதிர் கொள்ளலாம்?

1.சமூக மாற்றம் என்பது தவிர்க்க முடியாததாகும். அசையாது இருக்க இவை விரும்பலாம். ஆனால் காற்றடித்தால் அது அசையத்தான் செய்யும். மரபு மாறக்கூடாது என்று நாம் பேசலாம். ஆனால் நாம் மாற்றத்திற்கு உட்பட்டுத்தான் தீர வேண்டும். எனவே மாற்றத்தை ஏற்பதே நன்று என்பது சிலரது வாதம்

2.மாற்றத்திற்கு அடிபணியக் கூடாது எதிர்த்து நிற்றல் வேண்டும். அதற்கான காரியங்களிலிருந்து விடுபட வேண்டும் என்பது இன்னொரு சாராரது வாதம்.

3.மாற்றத்தை ஏற்றுக்கொள்வோம். ஆனால் நமது தனித்துவத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது அதாவது தனித்துவத்தை இழக்காத மாற்றம் என்பது இன்னொரு சிலரது வாதம்.

4.நம்மை நோக்கி வரும் மூன்று பெரும் அலைகளுக்கு எதிராக மேற்சொன்ன மூன்று வித கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இக்கருத்துக்கள் பற்றி சிந்திப்பதும் அலைகளுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் விழிப்புணர்வோடு இருந்து பணியாற்ற வேண்டியதும் நமது கடமையாகும்.

விழிப்புணர்வு என்பது எல்லோருக்கும் ஏற்படுவதல்ல. ஒரு சிலருக்கு முதலில் ஏற்படும். பின்னர் அது மற்றவருக்கு விளக்கப்படும். விழிப்புணர்வு என்பது நெருப்புப் போல அது பற்றிப் பிடித்து விட்டால் மக்களையே பெரு நெருப்பாக மாற்றி விடும்.

## செங்கலடி பொதுச் சந்தைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திரும்பினால் யார் பொறுப்பு?



செங்கலடி பொதுச் சந்தைக்கு மூன்று மாடி சந்தைக் கட்டிடம் அமைப்பதற்கு நல்லிணக்க அரச கரும மொழிகள் அமைச்சர் மானோ கணேசன் அவர்களினால் முதல் கட்டமாக 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் அதற்குரிய பணிகள் இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

குறித்த சந்தை கட்டிடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முழுமையான உத்தேச செலவு அறிக்கை அமைச்சினால் கோரப்பட்ட போது அதனை செங்கலடி பிரதேச சபை வழங்காது, இழுத்தடிப்பு செய்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்களால் முதற்கட்டமாக அவசர அவசரமாக 2 கோடிக்கான உத்தேச அறிக்கை கொடுக்கப்பட்டதன் காரணமாகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் குறித்த சந்தைக் கட்டிடத்தை முழுமையாக கட்டி முடிக்க எவ்வளவு நிதி வேண்டும் என அமைச்சர் கேட்டபோது அதற்கான உத்தேச அறிக்கை பிரதேச சபையிடம் இருக்கவில்லை.

இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க முதற்கட்டமாக 02 கோடி ரூபாய் ஒதுகீடு செய்ததுடன் அடுத்த கட்டமாக 05 கோடி ரூபாய் தருவதாக கூறியதுடன், மேலதிகமாக எவ்வளவு பணம் தேவையோ அதை தருவதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஏறாவூர் நகரில் சந்தை கட்டப்படுவதை பார்த்து விமர்சித்த தமிழர்கள், தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்தி செய்ய பணம் ஒதுக்கீடு செய்வதில்லை என்று குறைகூறும் தமிழ் பிரதிநிதிகள், இன்று செங்கலடி பொதுச் சந்தைக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்றாலும் தருகிறேன் கட்டிடத்திற்குரிய படம் உத்தேச செலவு அறிக்கையை தாருங்கள் என்று கேட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் செங்கலடி பிரதேச சபை இன்று வரை அதை வழங்கவில்லை.

இரண்டு கோடி ரூபாய்க்கு 7 கடைகள் கட்டுவதற்கான உத்தேச செலவு அறிக்கையை மட்டும் அரசாங்க அதிபரிடம் செங்கலடி பிரதேச சபை கையளித்துள்ளது.

**நிலவன்**

ஆனால் அதனை கடந்த 11 ம் திகதி கச்சேரியில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் நிராகரித்து விட்டார். நான் இரண்டு மாடி பொதுச் சந்தைக்கான முழுயான படம் மற்றும் செலவறிக்கையை தாருங்கள் என்று தானே கேட்கிறேன் என்று கூறியதுடன் ஜனவரியில் 05 கோடி தருவதாக கூறினார். ஆனால் அது குறித்து இன்றுவரை அரச அதிகாரிகள் மற்றும் செங்கலடி பிரதேசசபை கவனம் செலுத்தியதாக தெரியவில்லை.

செங்கலடி பொதுச் சந்தையை முழுமையாக கட்டுவதில் யாருக்கு என்ன பிரச்சினை?

அரசாங்க அதிபர் மற்றும் செங்கலடி பிரதேச சபை இது குறித்து அக்கறை காட்டாத நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள் உடனடியாக ஏறாவூர் நகர சந்தையை அமைத்த பொறியியலாளரை அழைத்து செங்கலடி பொதுச் சந்தைகான இரண்டு மாடி கட்டிடத்திற்குரிய படத்தை வரைந்து தருமாறு கோரியதற்கு அமைய, அவர் நேரடியாக வந்து சந்தையை பார்வையிட்டதுடன் கிழக்கு மாகாண கட்டிட திணைக்கள பணிப்பாளருடன் இணைந்து, ஒரு நவீன முறையிலான சந்தை கட்டிடம் ஒன்றை வரைந்து தருவதாகவும் அதற்காக சந்தை அமைந்துள்ள காணிக்காண சேவியர் வரைபடத்தை தருமாறும் கோரியுள்ளார்.

ஆனால் சேவியர் பிளானை செங்கலடி பிரதேச சபையிடம் கேட்டபோது தங்களிடம் அப்படி ஒரு படம் இல்லை என்று கூறியுள்ளனர்.

இந்த நிலையில் செங்கலடி பொதுச் சந்தையை முழுமையாக கட்டுவதை விரும்பாத நபர்கள் யார்?

அபிவிருத்தி இல்லை, பணம் இல்லை என்று நொண்டி சாக்குப் போக்கு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கலித்தொகை இன்பம்

## வண்டாடும் தலைவனால், திண்டாடும் தலைவி!

# தரணியோங்கத் தமிழ் வளர்ப்போம்!

கலித்தொகையில் மருதக்கலி என்றழைக்கப்படும் மருதத் திணைக்கான பகுதியில் 35 பாடல்கள் உள்ளன. அவை மருதன் இளநாகனார் என்ற புலவரால் பாடப்பட்டவை. வயலும் வயல் சூழ்ந்த இடமுமே மருதநிலம் எனப்படுகின்றது. நெல்விளையும் பூமி. நிறைவான வாழ்க்கை. செல்வச் செழிப்பிலே மக்கள் மிதந்தார்கள். குடும்ப உறவிலே சிறந்தார்கள். ஆடல்பாடல்களில் மகிழ்ந்தார்கள்.

பொருள்படைத்த ஆடவர்களில் சிலர் பரத்தையர்களையும் நாடினார்கள். அதனால் மனைவிமார் ஊடினார்கள். குடும்பப் பெண்கள் கணிகையிடம் சென்ற கணவனை உரிமையோடு கண்டித்தார்கள். வீட்டுக்கு வராதே என்று தண்டித்தார்கள். தவறுணர்ந்த ஆண்கள் கெஞ்சினார்கள். மனைவியர் மன்னித்து மீண்டும் கொஞ்சினார்கள். மருதக்கலியின் பாடல்களிலே இந்தக் காட்சிகளையெல்லாம் காணலாம்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவம் நிலவிய பண்டைத் தமிழகத்தைப் படம்பிடித்துக்காட்டுகிறது மருதக்கலி. ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதநிலத்தின் உரிப்பொருளாய் அமைந்ததென்ற தொல்காப்பிய நெறிப்படுத்துதலுக்குக் காரணமே உழவுத் தொழிலால் உயர்ந்து நின்ற அந்த மக்களின் வளமான வாழ்க்கை முறையில் நிலவிய பண்பாடுதான். அத்தகைய மருதக்கலியில் இருந்து ஒரு பாடலையும் அது தருகின்ற காட்சியையும் சுவைத்துப் பார்ப்போம்.

இருமனம் கலந்து, திருமணம் புரிந்து, இல்லறம் நடாத்திவருகிறார்கள் தலைவனும் தலைவியும். வருடங்கள் சில கடக்கின்றன. தலைவனின் மனதில் சபலம் பிறக்கின்றது. தலைவியோடு அன்பாகவே இருந்தாலும், பரத்தையர் உறவையும் அவனது உள்ளம் நாடுகின்றது. ஒருநாள் தலைவிக்குத் தெரியாமல் பரத்தையரிடம் சென்றுவிடுகின்றான்.



அவர்களோடு உறவாடி மகிழ்கின்றான். மீண்டும் மீண்டும் அங்கே செல்ல வேண்டும் என்ற வேட்கை அவனை வாட்டுகின்றது. அதனால் அந்த உறவினைத் தொடர்கிறான். ஒருநாள் இந்த விடயம் தலைவிக்குஎப்படியோ தெரியவருகின்றது. அவள் துக்கத்தால் துடித்துப் போகிறாள். கோபத்தால் கொதித்துப் போகின்றாள். தலைவனின் தேர்வருகின்ற சத்தம் கேட்கிறது. கண்கள் சிவக்க. உதடுகள் துடிதுடிக்க அவனது வருகைக்காகக்

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

அவள் காத்திருக்கிறாள். தப்பான வழியில் இன்பம் அனுபவித்துவிட்டுத் திரும்பிய தலைவன் இப்போது தேரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் வருகின்றான். தலைவி வார்த்தைகளால் அவனைச் சாடுகின்றாள். இதோ பாடல்:

"பொய்கைப்பூப் புதிது உண்ட வரிவண்டு கழிப்பூத்த

நெய்தல் தாது அமர்ந்து ஆடிப் பாசடைச் சேப்பினுள்

செய்து இயற்றியது போல வயல் பூத்த தாமரை

மைதபு கிளர் கொட்டை மாண்பதிப் படர்தரூஉம்

கொய்குழை அகைகாஞ்சித் துரை அணி நல் ஊர!

'அன்பிலன், அறனிலன், எனப்படான்' என ஏத்தி நின்புகழ் பலபாடும் பாணனும் ஏமுற்றான்

நஞ்சு உயிர் செகுத்தலும் அறிந்த உண்டாங்கு, அளி இன்மை

கண்டும், நின் மொழி தேறும் பெண்டிரும் ஏமுற்றார்

முன்பகல் தலைக்கூடி, நண்பகல் அவள் நீத்துப்

பின்பகல் பிறர்த்தேரும் நெஞ்சமும் ஏமுற்றாய்

எனவாங்கு –

கிண்கிணி மணித்தாரோடு ஒலித்து ஆர்ப்ப

ஒண்தொடிப் பேரமர்க்கண்ணார்க்கும் படுவலை இது என

ஊரவர் உடன்நகத் திரிதரும்

தேர் ஏமுற்றன்று, நின்னினும் பெரிதே."

(கலித்தொகை. மருதத்திணை. பாடல்: 9. பாடியவர்: மருதன் இளநாகனார்)

பாடலின் நேரடிக்கருத்து:

வண்டு ஒன்று பொய்கையில் பூத்த மலரின் புதிய தேனை உண்ணும். பின்னர் நெய்தல் மலருக்குச் சென்று அதன் மீது அமர்ந்து தேனுண்ணும். அதற்குப் பிறகு வயலிலே மலர்ந்திருக்கும் தாமரை மலரிலே வந்து அமர்ந்துகொள்ளும். அவ்வாறு ஒவ்வொரு இடமாக மாறிமாறிச் சென்று தேனைச் சுவைத்து மகிழும். அத்தகைய வண்டைப்போல உள்ளவனே! வளம்நிறைந்த காஞ்சித்துறையை உடைய ஊரைச் சேர்ந்தவனே, கேட்பாயாக! அன்பில்லாதவன், அறம் இல்லாதவன் என்றெல்லாம் ஒருக்காலமும் சொல்லப்படாதவன் நீ என்று உன்புகழைப் பாடித் திரிகின்றானே பாணன், அவன் பைத்தியம் பிடித்தவன். உயிரைக்கொல்லும் நஞ்சு என்று தெரிந்தும் அதனை உண்பவர்களைப்போல, நீ இரக்கமில்லாதவன் என்று தெரிந்திருந்தும் உனது பேச்சை நம்புகின்ற பெண்களும் பைத்தியம் பிடித்தவர்கள். முற்பகலில் ஒருத்தியுடன் கூடி இன்புற்றுப் பின் நண்பகலில் அவளை விட்டு நீங்கி வேறிடம் சென்றுவிட்டுப் பிற்பகலில் மற்றொருத்தியைத் தேடுகின்ற நீயும் பைத்தியம் பிடித்தவனாகிவிட்டாய். விலைமாதரை வீசிப் பிடிக்கின்ற வலை என்று உனது தேரை ஊரவர்கள் பரிகசித்துப் பேசுகிறார்கள். அத்தகைய தேருக்குப் பாகனாக இருப்பவன் உன்னையும் விடப் பெரிய பைத்தியக்காரன். (என்று தலைவனைப் பார்த்துத் தலைவி கோபத்துடன் கூறுவதாக இந்தப்பாடல் அமைந்தள்ளது)

தவறுகண்டவிடத்துத் தலைவனைத் தட்டிக்கேட்கவும், துணிவுடன் எதிர்த்துப் பேசவும்கூடிய அளவுக்குப் பண்டைத்தமிழ்ப் பெண்கள் சமத்துவ உரிமையுடன் விளங்கினார்கள் என்பதையும், ஆணாதிக்கத்திற்குட்பட்ட அடிமை வாழ்வு அன்றைய பெண்களுக்கு இருந்ததில்லை என்பதையும் இது போன்ற பாடல்களின்மூலம் அறியமுடிகின்றது.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர்,
புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

---

கடுகுக்கதை

## இந்தப்பழம் புளிக்கும்!

முற்காலத்தில் முதியோர் சொன்ன கதை
கற்புலம் காணா சிறார்கள்
கண்ணயர சிங்காரமாய் சித்தரித்தகதை - பெரியவர்கள்
நரியைப்பற்றி வரிவரியாய் வடித்த கதை - அவர்கள்
கற்பனையை வருத்தி பிள்ளைகளுக்கு
அள்ளி முடித்தகதை சொல்லிக் கொடுத்தகதை.
பச்சையுடுத்திய பனங்காட்டில் ஒருநரி
அக்காட்டின் நடுவே திராட்சைக்கொடி.
காட்டில் நல்ல வளங்கள் - அதனால்
கொடியில் ஏராளமான பழங்கள்.
கொழு கொழுவென பழங்கள் பெருத்திருந்தன - அவைகள் நரியின் கண்களை
உறுத்திவந்தன - அந்த
நரியோ குள்ளநரி! – அதன்
அறிவைச் சொல்வதானால் - ஆஹா!
அது விவேகத்தில் கரி.
குப்புற விழுந்தாலும் முகமண்ணைத்
தட்டிவிட்டு மீசையில் மண்ணில்லையென
முன்மொழியும் வித்தையை கொலுவேற்றி வரும்
அறிவுத்திறன் கொண்ட குறுநரி - அப்படி
கற்றுத்தேறிய நரி கொடியருகே வந்தது - அதன்
வாயில் எச்சில் வெளியேறி வந்தது.
எட்டாத உயரத்தில் பழங்கள்
கொத்தாக இருந்தது
எப்படிப் பறிப்பது விளங்காமல் நரி
சுற்றிச் சுற்றி வந்தது
எட்டி எட்டி எகிறியது
எட்ட முடியாமல் தவித்தது
தொங்கித் தொங்கி பாய்ந்தது
தொடமுடியாமல் களைத்தது
முடியாது முயற்சி இனி முடிவுறாது
கடினமாக முயன்றும் கைக்கு எட்டவில்லை
கைக்கும் எட்டவில்லை வாய்க்கும் எட்டவில்லை
தோல்வியை ஏற்கவும் முடியவில்லை
நடையைக் கட்டிக் கொண்டு

விடை பெற்றது நரி



கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

சீச்சி இந்தப்பழம் புளிக்கும் என்றபடி.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 7

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### நாவலர் எழுந்தார்

இப்பாடப் பகுதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட ஓர் கட்டுரையாகும். இதிலிருந்து சில வினாக்களும் விடைகளும் தரப்படுகின்றன. அவை வருமாறு:

1. 'நாவலர் எழுந்தார்' என்னும் கட்டுரை இடம்பெற்ற நூலின் பெயரைத் தருக.
   இலக்கிய வழி

2. கூட்டம் எங்கே நடைபெற்றது?
   வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றது.

3. அக்கூட்டம் ஏன் கூட்டப்பட்டது?
   சேர் பொன். இராமநாதன் மற்றும் பிறிற்றோ ஆகிய இவ்விருவரில் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தக்கவர் யார் என்பதை வாதிப்பதற்காக அக்கூட்டம் கூட்டப்பட்டது.

4. இக்கூட்டத்துக்குத் தலைமை வகிக்கவேண்டியவர் யார்?
   ஆறுமுகநாவலர்

5. இக்கூட்டத்க்குத் தலைமை வகித்தவர் யார்?
   வை. விசுவநாதபிள்ளை

6. ஆறுமுகநாவலர் இக்கூட்டத்துக்குத் தலைமை வகிக்காமைக்கான காரணம் யாது?
   காச வருத்தத்தால் பீடிக்கப்பட்டிருந்தமை

7. வை.விசுவநாதபிள்ளை பற்றிக் கட்டுரையாசிரியரின் கருத்துக்களைத் தருக.
   - ஆறுமுகநாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டு மூத்தவர்.
   - சென்னைச் சர்வகலாசாலையார் முதன்முதலில் நடத்திய பி.ஏ பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தவர்கள் இருவருள் ஒருவர்.
   - இப்பரீட்சையில் சித்தியடைந்த மற்றவரான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் ஆசிரியர்.
   - மகா விவேகி, கணித மேதை.
   - இளமைக் காலத்திலிருந்தே பத்திரிகை வாயிலாக பலவிடயங்களில் வாதஞ்செய்தவர்.
   - ஆறுமுகநாவலர் அவர்களை எதிர்த்துப் பல கண்டனப் பத்திரிகைகளைப் பதித்து வெளியிட்டவர்.
   - சிதம்பரத்தில் ஆறுமுகநாவலர் அவர்களுடன் நேரில் வாதஞ்செய்தவர்.
   - ஆறுமுகநாவலர் அவர்களின் கொள்கைகளுக்கிணங்க, ஆறுமுகநாவலர் அவர்களிடம் மதிப்புவைத்து அவரைக் குருவாக ஏற்றுக்கொண்டவர்.
   - நிலைமை கருதி நடந்துகொள்பவர்.

8. சேர் பொன். இராமநாதன் அவர்களைப் பற்றிக் கூறுக.
   - இருபத்தைந்து வயது இளைஞர், சிரித்த முகம், தங்கச் சொருபம், சென்னைப் பட்டணத்தில் படித்தவர். யாழ்ப்பாணத்தவராயிருந்தாலும் யாழ்ப்பாணத்தவரால் அறியப்படாதவர்.

9. பிறிற்றோ அவர்களைப் பற்றிக் கூறுக.
   - பிரசித்திபெற்ற பழுத்த வழக்கறிஞர், அக்காலத்துச் சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர், இலங்கையில் பிரபல்யமானவர், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்குப் பெரிய பேர், பாரிய வழக்குகள் - மேன்முறையீடுகளுக்கும் வழக்கறிஞராக நியமிக்கப்படுகின்ற அளவுக்குச் சிறந்த சட்ட நிபுணர், அந்த நாள்களில் யாழ்ப்பாணத்தில் அளவுகடந்த செல்வாக்குடையராக விளங்கியவர்.

10. கூட்ட மண்டபத்தில் ஆரம்பத்தில் கூட்ட நடைமுறைகளை ஆறுமுகநாவலர் அவர்கள் அவதானித்துக்கொண்டிருந்த நிலையைக் கூறுக.
    - மண்டபத்தில் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகில் திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்துகொண்டும் மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி, உள்ளங்கைகளினால் நெற்றியைத் தாங்கிக்கொண்டும் கூட்ட நடைமுறைகளை அவதானித்துக்கொண்டிருந்தார்.

இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கம் பத்திரிகைக்கு அனுப்பிவைக்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். தாமதிக்காதீர்கள். க.பொ.த.(சா.த) பரீட்சை நெருங்குகிறது.

ஆசிரியர்-அரங்கம், இல:227, பார் வீதி மட்டக்களப்பு.

# கற்போம்

### கற்பதற்கான இடத்தின் அமைவு

அன்பின் மாணவர்களே, பெற்றோர்களே.....

கற்பதற்கான சூழல் மிகவும் முக்கியமானது. இங்கு சூழல் என்பது இடத்தைக் குறிக்கின்றது. கற்றல் சூழல் ஒழுங்காக அமைகின்ற போது கற்றல் செயற்பாடுகள் இலகுவாகும் என்பது ஆய்வுகளின் முடிவு. அதற்காக பின்வரும் முறையை சற்றுப்பின்பற்றித்தான் பார்ப்போமே.

* மாணவர்கள் தங்களுக்குப் பொருத்தமான அறை ஒன்றைத் தெரிவு செய்தல் வேண்டும்.

* பொருத்தமான அளவில் மேசை ஒன்றைத் தெரிவு செய்து தாங்கள் தீர்மானித்த அறையில் அதனை சுவர்ப்பக்கமாக வைத்தல் வேண்டும். மாறாக யன்னல் பக்கமாக வைத்தால் தங்களது கவனம் திசைதிருப்பப்பட்டு தங்களது கற்றல் நடவடிக்கை பாதிக்கப்படும்.

* வெளிச்சம் என்பது கற்றலில் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. மின்குமிழை பின்புறமாகவிருந்து மேசையில் படத்தக்க வகையில் அமைத்தல் வேண்டும். மாறாக சுவரில் பொருத்தினால் மின்னொளி நேரடியாக கண்களில் பட்டு கண் தசைகள் விரைவில் களைப்படைந்து கற்றல் செயற்பாடுகளில் இடையூறு ஏற்படும்.

* மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென இலட்சியத்தை வரையறுத்துக்கொள்ள வேண்டும். அவ்விலட்சியத்தை தங்களது பெயருடன் சுவரில் காட்சிப்படுத்தி ஒட்டி வைத்தல் வேண்டும்.

*உதாரணமாக,*
தமிழ்கவி தமிழரசன் எனும் மாணவனின் இலட்சியம் கணித பாட ஆசிரியராக வரவேண்டும் என இருப்பின்

தமிழ்கவி தமிழரசன்
B.Sc,Msc,PhD(Maths)

என்றவாறு பிரதி எடுத்து மேசை முன்னால் உள்ள சுவரில் ஒட்ட வேண்டும்.

* தங்களது கற்றல் மேசையின் மீது தாங்கள் அவ்வேளை படிக்க வேண்டிய பாடத்தின் புத்தகம் , குறிப்புக்கள் மற்றும் எழுதுகருவி ஆகியவற்றை மாத்திரம் வைத்தல் வேண்டும். ஏனைய புத்தகங்களை வேறொரு இடத்தில் வைத்தல் வேண்டும். மாறாக அனைத்து புத்தகங்களையும் ஒரே மேசையில் வைத்ததால் தங்களது கவனம் திசை திரும்பி கற்றல் செயற்பாடு பாதிக்கப்படும்.

மா. வரதராஜன்
BA(Hons), Dip.in.CP (Merit), MDE(Merit)

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

இலங்கையின் பல்லின சமூக கட்டமைப்பு

| தேசிய இனங்கள் | (%) | தேசிய சமயங்கள் | (%) | தேசியமொழிகள் | (%) |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 73.8 | பௌத்தம் | 69.1 | சிங்களம் | 74 |
| தமிழர் | 13.9 | இந்துசமயம் | 17.1 | தமிழ் | 18 |
| இந்தியதமிழர் | 4.6 | இஸ்லாம் | 7.6 | ஏனையவை | 8 |
| முஸ்லிம்கள் | 7.2 | கிறிஸ்தவம் | 6.2 | | |
| பறங்கியர் | 0.5 | சீர்திருத்த திருச்சபை | 1 | | |

## பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# மதுபாவனையில் உளநலம்

## மதுபாவனைக் கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை

'நல்ல மனிதன் சாரயத்தை தொட்டதுமில்லை, அது தொட்டவனை லேசுல விட்டதுமில்லை' கண்ணதாசனின் கவிதைகளிற்கு சிம்மக் குரலில் சௌந்தரராஜன் பாடியது இன்றும் பொருத்தமானதே. தொன்றுதொட்டு மக்கள் பல்வேறுவிதமான போதைப் பொருட்களிற்கு அடிமையாகியுள்ளமை வரலாறு சொல்லும் பாடமாகும். இந்தப் பழக்கங்கள் தனிமனித பாதிப்புகளோடு மட்டுப்படுத்தப்படுமானால் அதன் பெறுதிகள் மிக சொற்பமாகவே அமையும். மாறாக குடும்பம், சமூகம், கலாச்சாரம், பண்பாடு, நாட்டின் அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம், பொருளாதார அழிவுகள் என இவை ஏற்படுத்தும் பாதிப்புகளின் பட்டியல் நீண்டே செல்லுகின்றது.

இலங்கையில் மதுபானங்கள், கஞ்சா, 'கெரோயின்', 'மருஜுவானா', லேகியம், அபின், சில மருந்துகள் என்பன பொதுவாக பொதுமக்களால் போதைக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் மதுபாவனையும், அதன் தீவினையும் சாதாரண பாமர மக்கள் தொடக்கம் தனவந்தர்கள் வரை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

இக்கட்டுரை இலங்கை அரசாங்கம் மிக அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய 'மது பாவனை கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கையின் உள்ளடக்கத்தை ஓரளவு அறிய உதவும். இதில் அடங்கியுள்ள விடயங்கள் உண்மையாக அமுல்படுத்தப்படுமானால் இலங்கை விரைவில் 'ஆசியாவின் ஆச்சரியமாக மாறலாம்'

**மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை**

மதுபாவனை பொதுமக்களின் நலனில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதோடு, நாட்டின் அபிவிருத்தி, வறுமை என்பவற்றில் செல்வாக்கு செலுத்தி, உலகளாவிய ரீதியாக மனித அழிவிற்கு பிரதான காரணமாகின்றது. மதுபாவனை தனிமனித, குடும்ப, சமூக மட்டங்களில் மட்டுமன்றி ஒட்டு மொத்தமாக ஒரு நாட்டின் அபிவிருத்தியிலும், கட்டுமாணங்களிலும் பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்றது. மிகக்குறைந்த, மத்தியதர வருமானமுள்ள நாடுகளில் மதுபாவனை இளவயது இறப்பு வீதத்தில் முதன்மை பெறுவதுடன், உலக நோய் பரம்பலில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவில் உள்ளது. மதுபாவனையால் ஏற்படுகின்ற நோய்கள்,விபத்துக்கள் அடங்கலாக பட்டியலிடப்பட்டுள்ள 200 வரையான ஏனைய நோய்களில், 60 வரையான நோய்களிற்கும், விபத்து சம்பந்தப்பட்டகாயங்களிற்கும் மதுபாவனையே காரணம் என உலக சுகாதார ஸ்தாபன 2004 ஆண்டு அறிக்கை குறிப்பிடுகின்றது. இலங்கையில் மதுபாவனையால் ஏற்படுகின்ற 'ஈரல்கருகல் நோய்' (Cirrhosis) ஏற்படுத்துகின்ற மரணவீதம் ஆண்களில் ஒரு லட்சம் பேரில் 33.4 சதவீதமாகும். இது உலக அளவில் அதிகூடியசதவீதமாகும். மதுபாவனை தற்கொலை மரணங்களுடனும் தற்கொலை முயற்சிகளுடனும் மிகக் கூடிய அளவில் தொடர்புபட்டுள்ளது. அதிலும் இலங்கை முன்னிலை பெறுகின்றது.




இலங்கையில் நோய்களால் ஏற்படுத்தப்பட்டுகின்ற பத்து இறப்புகளில் ஏழு இறப்புகள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. இதில் நான்கு வகைகள் மதுபாவனையுடனும் ஏனைய மூன்றும் புகைத்தலுடனும் முறையற்ற உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இன்மை என்பவற்றுடனும் தொடர்புடையனவாகும். இலங்கையில் தற்போதைய புள்ளிவிபரங்களின் படி ஆண்களில் 37.5 சதவீதத்தினரும், பெண்களில் 1.2 சதவீதத்தினரும் மதுப்பழக்கத்திற்கு உட்பட்டுள்ளனர். இந்த நேரத்தில் இலங்கைக்கான தேசிய மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கை வெளிவந்துள்ளது. இலங்கை அரசாங்கம் இது குறித்த செயற்திட்டங்களை வகுக்க உதவும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தொற்றா நோய்களால் ஏற்படுகின்ற மரணங்களை 25 சதவீதத்தால் 2025 ஆண்டளவில் குறைப்பதற்கும் இது உதவியாக அமையும்.

**கடைப் பிடிப்பதற்கான முக்கிய ஒழுங்கு விதிகள்**

மது ஒழிப்பு நிகழ்சியை பகிரங்கப் படுத்தலின், முக்கிய சான்றுகளுடன் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். கொள்கைகள் வகுக்கப்படும் போது இன, மத, கலாச்சார அமைவுகளிற்கு ஏற்றதாக

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

அமைய வேண்டும். இம் மது ஒழிப்பு மற்றைய விடயங்களோடு ஒப்பிடாமல் சமூதாய, பொருளாதார, சுகாதார அபிவிருத்திப் பாதையில் கொண்டு நடாத்தப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பொதுமக்கள், பல்துறை ஆளணியினர் உடன் நடாத்தப்படவேண்டும்.

பொதுச்சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில் முக்கிய பங்குகொடுக்கப்பட வேண்டும். மதுபான தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், சந்தைப்படுத்துபவர்கள், விற்பனையாளர்கள், மறைமுகமாக தொடர்புடைய யாவரையும் அபிவிருத்திக்காகவோ, கல்வி, பொருளாதார, சுகாதாரம் போன்ற எந்தவொரு துறைக்கும் முதலீடு செய்வதை கட்டுப்படுத்தல் வேண்டும். மதுபாவனையால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போன்ற யாவரையும் பயனுடைய தடுப்பு, சிகிச்சையளிப்பு, சேவைகளிற்கும் சமூக மட்ட புனர்வாழ்வு செயற்பாடுகளிற்கும் உட்படுத்தல் வேண்டும். தேசிய போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் கொள்கைகளிற்கு அமைவாக மதுபாவனையை தடுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற சட்டங்கள் அமைய வேண்டும். சமுதாய பங்களிப்புடன் கொள்கை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் என்பன அமைய வேண்டும். அரசியல் உள்வாங்குதலுடன், பயனுடைய நடைமுறைப்படுத்தல் விடயங்கள் தேசிய மதுபாவனை கொள்கைக்குள் உள்வாங்கப்படுதல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(தொடரும்)

---

# வலது மற்றும் இடது மூளைச் சந்தைப்படுத்தல்




தற்போதை காலகட்டத்தில் சந்தைப்படுத்துனர்களால் பல்வேறுபட்ட சந்தைப்படுத்தல் நுட்பங்கள் மற்றும் போக்குகள் மக்களை கவர்வதற்காகவும் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக்கொள்வதற்காகவும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று சந்தைப்படுத்தலை பொறுத்த வரையில் மக்களின் பார்வைக் கோணங்களும் இரசனைகளும் ஆளுக்காள் வேறுபட்டதாகவே காணப்படுகின்றன.

உதாரணத்திற்கு ஒரு விளம்பரத்தை எடுத்தால் கூட நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயங்களை கவனத்தில் எடுக்கின்றோம். சிலர் விளம்பரத்தில் காணப்படுகின்ற ஆக்கத்திறனான புதுமையான விடயங்களை நோக்குவர். சிலர் விளம்பரத்தில் பயன்படுத்தப்படும் நிறங்கள், வடிவமைப்புகள், காட்சியமைப்புக்கள் மற்றும் நடிக நடிகைகளால் ஈர்க்கப்படுகின்றனர். அதேநேரத்தில் சிலர் விளம்பரப்படுத்தப்படும் பொருளின் விபரங்கள் நன்மைகள் மற்றும் செலவுகள் பற்றி கூடிய கவனத்தை செலுத்துவர்.

இவ்வாறு ஒவ்வொரு மக்களும் சந்தைப்படுத்தல் விளம்பரங்களை பார்ப்பதும் புரிதலும் ஆளுக்காள் வேறுபட்டதாகவே காணப்படுகின்றன. இவையாவும் ஒவ்வொரு தனிநபருடைய ஆளுமையிலும் உளவியல் மற்றும் சிந்திக்கும் ஆற்றலிலும் தங்கியுள்ளது.

இந்தத் தனிநபர்களின் ஆளுமை உளவியல் மற்றும் சிந்திக்கும் ஆற்றல் என்பவற்றை அடிப்படையாக கொண்டே வலது மற்றும் இடது மூளைச் சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் பிரயோகிக்கப்படுகிறது.

உளவியலாளர்கள் மற்றும் ஆளுமைத்தத்துவவாதிகள் மூளையின் வலது பக்கம் மற்றும் இடது பக்கங்களுக்கிடையே பாரிய வேறுபாடுகள் இருப்பதாக நிருபித்துள்ளனர். வலது பக்க மூளையானது பெரும்பாலும் ஆக்கத்திறன் மற்றும் படைப்புதிறன் ரீதியாக சிந்திப்பதாகவும் இடது பக்க மூளையானது தர்க்கரீதியாக சிந்திப்பதோடு விபரங்கள் மற்றும் செயற்பாடுகளை கையாள்வதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறான இரண்டு வகையான சிந்திக்கும் ஆற்றல் உடையோரை இலக்காக கொண்டு தங்களுடைய "இலக்கு வாடிக்கையாளர்களை" கவரும் வண்ணம் இன்று பல்வேறுபட்ட வகையான சந்தைப்படுத்தல் உத்திகளும் விளம்பரங்களும் வடிவமைக்கப்பட்டு வாடிக்கையாளர்களை கவருகின்றன.

வலது பக்க மூளை சிந்தனை யுடையவர்கள் படைப்புத்திறன் கற்பனைத்திறன் மற்றும் கலைநாட்டம் கொண்டவர்களாகவும் அத்தோடு அதிகளவில் உணர்ச்சிபூர்வமானவர்களாக இருப்பர். அதிகளவில் நாம் இவர்களை கற்பனை எழுத்து மற்றும் இசை உலகில் காணலாம்.

ஹரிஷ் சிவா
முகாமைத்துவ பீடம்
கிழக்கு பல்கலைக்கழகம்

இவ்வாறான ஆற்றல் உடையவர்களை கவர்வதற்காக பல்வேறுபட்ட கற்பனைத்திறன் கூடிய ஆக்கபூர்வமான இரசனை மிகுந்த வித்தியாசமான சந்தைப்படுத்தல் உத்திகளும் விளம்பரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

அடுத்ததாக இடதுபக்க மூளைச் சிந்தனை உடையவர்களை எடுத்து நோக்கினால் இவர்கள் வலது பக்க மூளைச் சிந்தனையாளர்களுக்கு எதிர்மாறாக அதிகளவில் உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தர்க்கரீதியாக சிந்திப்பதோடு பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் புள்ளிவிபரவியல் கணிதம் மற்றும் விஞ்ஞான ரீதியான ஈடுபாடு உடையவர்களாகவும்; சிறப்பாக திட்டமிட்டு தீர்மானம் மேற்கொள்ள கூடியவர்களாகவும் இருப்பர்.

இவ்வாறானவர்களை கவர்வதற்காக சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் விளம்பரங்களின் போது பொருள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# சிறுநீரகம் தேவை

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 36 வயதுடைய பெண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077-9912867

தொடர்ச்சி...

## வலது மற்றும் இடது மூளைச் சந்தைப்படுத்தல்

பற்றிய உண்மை தரவுகள் மற்றும் புள்ளி விபரங்கள் மற்றும் எதற்காக அந்தப் பொருளை பயன்படுத்த வேண்டும்? அப் பொருளினால் கிடைக்கும் பயன் என்ன? என்பது போன்ற மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் விளம்பரங்கள் வடிவமைக்கப்படுவதோடு இங்கு கவர்ச்சிகரமான உள்ளடக்கங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்படுகின்றன உதாரணமாக காட்சி வடிவமைப்புகள், நடிகர் நடிகைகள் என்பவற்றை கூறலாம்.

இன்றைய வணிக உலகில் நாம் ஒவ்வொருவரும் தினமும் பல்வேறுபட்ட புதுமையான பொருட்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தபடுவதனையும் காலையில் வீட்டில் இருந்து புறப்பட்டு, இறுதியில் இரவு வீட்டிற்க்கு வந்து கண் உறங்குவது வரையிலும் கைத்தொலைப்பேசி, தொலைக்காட்சி என்றும் செல்லும் இடமெல்லாம் பல வகையான விளம்பரங்களை பல்வேறுபட்ட வடிவங்களில் காண்கிறோம்.

ஆனால் காண்கின்ற அனைத்து விளம்பரங்களையும் நினைவில் வைத்து கொள்கிறோமா? அவை பற்றி பேசுகின்றோமா? அல்லது அப் பொருட்களை வாங்குகின்றோமா? என்றால் இல்லை என்பதே கிடைக்கும் பதிலாகும். ஆனால் சில வகையான விளம்பரங்கள் மாத்திரம் நினைவில் இருக்கும் ஏனென்றால் விளம்பரத்தில் காட்சியமைக்கப்பட்ட காட்சியமைப்புக்கள், நிறங்கள், நடிக நடிகைகள், பொருளின் தன்மை என்று பல வகையான காரணிகள் எமது புலன்களில் செல்வாக்கு செலுத்துகின்றன.

இவ்வாறான காரணிகளும் உணர்வுகளும் ஆளுக்காள் வேறுபட்டவையாகவே காணப்படுகின்றன. இதற்கு மறைமுகமான காரணமாக இருப்பது இந்த வலது மற்றும் இடது பக்க மூளை பிரயோகங்களே ஆகும்.

இந்த பிரயோகங்களை அடிப் படையாக கொண்டே சந்தைப் படுத்தல் வல்லுனர்களால் வலது மற்றும் இடது பக்க மூளை சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

தொடர்ச்சி...

## பாரதிராஜா வருகை ....

அமர்த்துவதும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பதும் தவறான முன்னுதாரணமாகும்.

மாணவர்களுக்கு எதை, எப்படியானவர்களை முன்னு தாரணப்படுத்த வேண்டும் என்ற தெளிவில்லாமல் செய்யும் காரியங்களே இளைய தலைமுறையினரை தவறானவர்களாக்குகின்றன. ஒரு காலம் பாரதிராஜாவின் திரைப்படங்களைப் பார்த்து அவரை மதித்தவர்கள் நாம். அதில் அவர் திறமையாளராகவே இருந்தார். அந்த மதிப்பு இன்னும் உண்டு. ஆனால், அதற்காக அவர் இன்று இவ்வாறு நடப்பதையெல்லாம் எதன் பொருட்டும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இதை சரியாகப் புரிந்து கொண்டு துணிவாகப் பேசவில்லை என்றால், நாளை இன்னொரு அரசியல்வாதி அல்லது இன்னொரு தரப்பு இன்னும் நான்கு நடிகர்களையோ நடிகைகளையோ கொண்டு வந்து காட்சிப் பொருளாக்குவர்.

அன்று நொந்து ஆகப்போவ தொன்றுமில்லை.

தொடர்ச்சி...

## செங்கலடி பொதுச் சந்தைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திரும்பினால் யார் பொறுப்பு?

சொல்லி மக்களை ஏமாற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வருகின்ற அபிவிருத்திகளை ஒழுங்காக செய்யமுடியாது விட்டு விட்டு ஏனைய அபிவிருத்திக்கு எவ்வாறு பணம் கேட்க முடியும்?

ஒரு சந்தை கட்டிடத்திற்கு முழுமையான படம் வரைந்து அதற்கான உத்தேச செலவு அறிக்கை தயாரித்து அதனை கட்ட முடியாத திறமையற்ற நிலையில் ஒரு பிரதேச சபை இருக்கிறது என்றால் இதைவிட வெட்கக்கேடு என்ன உண்டு?

ஒரு பிரதேச சபை நிர்வாகத்திற்கு கீழ் வரும் அபிவிருத்தி திட்டம் ஒன்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் அதனை பொறுப்பேற்று செய்ய வேண்டியது அனைத்து பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களது கடமை.
ஆனால் இது அமைச்சர் மனோ கணேசன் கொடுத்த நிதி, பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கொண்டு வந்த நிதி. இதன் ஊடாக சந்தைக்கட்டிடம் காட்டினால் அவர்களது செல்வாக்கு கூடிவிடும் என்று கருதி சிலர் பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணத்தை திருப்பி அனுப்ப முயற்சிக்கிறார்களா என்று சந்தேகிக்க இவை வழி செய்கின்றன.

செங்கலடி பொதுச் சந்தைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் திரும்பிச் செல்லுமாக இருந்தால் அதற்கு மக்களின் வாக்குகளை பெற்ற பிரதேசசபை உறுப்பினர்களும் மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அதிகாரிகளுமே பொறுப்புகூற நேரிடும்.

(இதற்கான பதில் கருத்தை உடனடியாக பெற முடியவில்லை. இதற்கு பிரதேச சபை அல்லது அதிகாரிகள் பதிலளித்தால் அதற்கும் இடம்தர அரங்கம் பத்திரிகை தயாராக இருக்கிறது.)

தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 23

1949இல் உருவாக்கிய இலங்கை தமிழரசுக் கட்சியும் இணைந்து, 1976இல் உருவாக்கிய அரசியல் கூட்டமைப்பு ஆகும். தமிழர் விடுதலைக்கூட்டணியின் உருவாக்கத்தின் பின்னர் தமிழ் அரசுக் கட்சி உறங்கு நிலைக்கு சென்றிருந்தபோதிலும், தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் மகன் குமார் பொன்னம்பலத்துக்கும் இடையில் 1977ஆம் ஆண்டு தேர்தலின் போது ஏற்பட்ட தகராறு காரணமாக குமார் பொன்னம்பலம் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸை மீண்டும் புதுப்பித்துக்கொண்டார்.
இந்தக் கட்டத்தில் ஒரு முக்கியமான விடயத்தை பதிவு செய்ய வேண்டியுள்ளது.

1994ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது, அம்பாறை மாவட்டத் தமிழர்களின் ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தக்கவைப்பதற்காக அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமல்லாது அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் போட்டியிட வேண்டும்மென்று அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் பேச்சுவார்த்தை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்,

ஏனைய தமிழ்க் கட்சிகள் யாவும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் "உதயசூரியன்" சின்னத்தில் போட்டியிட சம்மதித்திருந்த போதிலும் அமரர் சிவசிதம்பரம் தலைமையிலான அப்போதைய தமிழர் விடுதலைக்கூட்டணி "இரத்தக்கறை படிந்தவர்களுடன் கைகோர்க்க மாட்டோம்" என்று சூளுரைத்து மறுப்புத் தெரிவித்தது.

அதேபோல 2000ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போதும் அப்படித்தான் நடந்துகொண்டது.

ஆனால், 2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடச் சம்மதித்தமை ஏனென்று சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

இப்போது அவர்களுக்கு இரத்தக்கறை தெரியவில்லைப் போலும்.

இந்த விவகாரத்தில் இரண்டு விடயங்களை அம்பாறை மாவட்டத் தமிழர்கள் புரிந்துகொள்ளவேண்டியுள்ளது.

அது, அன்றைய தமிழரசுக் கட்சியாக இருந்தாலென்ன, பின்னர் வந்த தமிழர் விடுதலைக்கூட்டணியாக இருந்தால் என்ன, இப்போதுள்ள தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் நிறைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இருந்தால் என்ன, கடந்த எழுபது வருடகாலத்

தமிழ் அரசியல் தலைமை என்பது, யாழ்குடாநாட்டுக்குள்ளேயுள்ள குட்டி முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பேணுவதற்காக, அதற்கு வெளியே உள்ள வன்னி உட்பட கிழக்குத் தமிழர்களினதும் நலன்களைப் பலி கொடுக்கும் ஏகாதிபத்திய சார்பு கொண்ட - யாழ் மேட்டுக்குடி - யாழ் மையவாத அரசியலே என்னும் விடயமாகும்.

(தொடரும்)

தொடர்ச்சி...

## அற்பாயுளில் மறைந்த படைப்பிலக்கிய ஆளுமை

புதியதரிசனங்கள் ( கட்டுரை).

இலங்கை மூத்த எழுத்தாளர் மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா அறிமுகப்படுத்திய ஸஹானாவை இலக்கியரீதியாக நேசித்தவர் தமிழகத்தின் மூத்த இலக்கிய ஆளுமை ஜெயகாந்தன். ஸஹானாவின் முதலாவது கதைத்தொகுப்பிற்கு ஜெயகாந்தனும் வாழ்த்துரை வழங்கியுள்ளார்.

மல்லிகை ஜீவா அறிமுகப்படுத்திய ஸஹானாவின் முதல் கதையும் முதல் கவிதையும் மல்லிகையில்தான் வெளியாகின. இவரது முதல் கதைத்தொகுப்பு ஒரு தேவதைக்கனவு நூலும் மல்லிகைப்பந்தல் வெளியீடாகவே வரப்பெற்றது.

ஜெயகாந்தன் பற்றிய ஆய்வு நூலையும் எழுதியிருக்கும் இந்த பன்னூல் ஆசிரியை தனக்கிருந்த நோய் உபாதையையும் வெளியே பகிரங்கப்படுத்தாமல், அயர்ச்சியின்றி எழுதிவந்தவர். படைப்பிலக்கியத்திற்கு கற்பனை வளமும் படைப்பூக்கமும் மொழி ஆளுமையும் தேவை. மொழிபெயர்ப்புக்கு மூல நூலின் ஆசிரியரின் உணர்வுகளை பிரதிபலிக்கத்தக்க பிரத்தியேக ஆற்றல் இருக்கவேண்டும்.

ஸஹானா ஒரே சமயத்தில் இரண்டு துறையிலும் பிரகாசித்தவர்.

இலக்கியவானில் பிரகாசித்த இந்தத் தாரகை உதிர்ந்துவிட்ட செய்தியைக் குறிப்பிட்டு, அவரின் இலக்கிய ஆளுமைப்பண்புகளையும் வெளிப்படுத்தி விரிவான கட்டுரை எழுதினேன்.

இதுவரையில் ஜெர்மனி, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் வெளியாகும் இணைய இதழ்களிலும் ஒரு சில இலக்கிய நண்பர்களின் முகநூல்களிலும் இந்த ஆக்கம் வெளியானது.

இதனைப்பார்த்துவிட்ட இலங்கைப் படைப்பாளிகள் சிலர் எனது மின்னஞ்சலில் தொடர்புகொண்டு கெக்கிராவ ஸஹானாவுக்கு என்ன நடந்தது ? எனக்கேட்டனர்.

இந்தக்கேள்வி எனக்கு இரண்டாவது அதிர்ச்சி. மறைந்தவர் இலங்கையில்! நானிருப்பது அவுஸ்திரேலியாவில்! துக்கம் விசாரிப்பவர்கள் தொடர்புகொள்வதும் இலங்கையிலிருந்துதான்.

இந்த இலட்சணத்தில் எமக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதங்கள்: மின்னஞ்சல், முகநூல், வைபர், ட்விட்டர், முகநூல், ஸ்கைப், வாட்ஸ்அப்.

இனிமேல் எம்மோடு பேசிக் கொண்டிருக்கப் போவது ஸஹானாவின் இலக்கியப்பிரதிகளும் அவரது அன்புச்செல்வங்களும் கணவரும் உறவினர்களும்தான்.

நினைவுகளில் நிரந்தரமாகிவிட்ட இலக்கிய சகோதரி ஸஹானவுக்கு எமது இதய அஞ்சலி.

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+ CALL US

Business Course: 0208 514 0033

Hospitality Management: 0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management
- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Pearson

Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa